தமிழ்ப் பொழில்

தமிழாராய்ச்சித் திங்களிதழ்

துணர் : 59 மலர் : 8 .

உள்ளுறை

1. **சித்தாந்தப் புலவர் மணி முருகவேள்** 337

சிறுவை மோகன சுந்தரன் *
" தமிழகம் " சென்னை-81.

2. **தொல்காப்பிய உவமவியல் காண்டிகையுரை** 344

பேராசிரியர் ச. பாலசுந்தரம்.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

3. **ஏட்டில் தமிழ் படும்பாடு** 355

முனையர் சாலை. இளந்திரையன்
பேரவை இல்லம், திருவீதியன் தெரு,
கோபாலபுரம், சென்னை-86.

4. **சுவடியில் ஒரு காலக்குறிப்பு** ... 359

S. சௌந்தரபாண்டியன், எம். ஏ., (தமிழ்), எம்., (ஆங்),
பி. எட்., டிப். வ. மொ.
அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்,
சென்னைப் பல்கலைக் கழகம்,
சென்னை-5.

5. **பொருள் நிலைக்குச் சாரியை உதவுகிறதா? ...** 368

கன்னக்குறிச்சி வை. தங்கமணி
பி. கே. என். ஆண்கள் மேல்நிலைப் பள்ளி,
திருமங்கலம்-626 706.

6. **மௌரியரைப் பற்றிய சங்கப்பாடல்கள் காலம் ஓர் ஒப்பாய்வு** 373

பூரண சந்திர ஜீவா, M. A.,
அரசு மேனிலைப் பள்ளி,
பாதிரிவேடு, மாதர் பாக்கம் (அஞ்)
செங்கற்பட்டு (மாவட்டம்) 601 202.

* கட்டுரையில் சிறுவை. நச்சினார்க்கினியன் எனத் தவறாக அச்சிடப்பட்டு விட்டது. அருள் கூர்ந்து திருத்திக் கொள்க.

தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு — 2016

துணர்: 59 குரோதன — கார்த்திகை மலர்: 8

நவம்பர் — டிசம்பர் 1985



சித்தாந்தர் புலவர் மணி முருகவேள்

— சிறுவை. நச்சினார்க்கினியன்

'உயர்தனிச் செம்மொழிகள்' எனப் போற்றப் பெறும் மொழிகள் சிலவற்றுள் தமிழ்மொழி தனிச்சிறப்பு வாய்ந்ததும், இற்றைக்குச் சுமார் 7,000 ஆண்டுகளுக்கு முன்பே தனக்கென இலக்கியங்களும் இலக்கணமும் பெற்றுத் திகழ்ந்ததுமாகும் என்பது மொழியியல் அறிஞர்கள் கூறும் புகழ்மிக்க செய்தியாகும்,

தமிழ் அறிஞர்கள் பண்டுதொட்டே ஒருங்கிணைந்து சங்கமாகக் கூடி மக்களின் நாவின் இயல்பையும் ஒலியியலின் இயல்பையும் ஆராய்ந்தறிந்து இயற்கை நெறிக்கு ஏற்பத் தமிழ் எழுத்துக்களை அமைத்தனர். பின்னர் இலக்கியங்களையும் இலக்கணத்தையும் யாத்துச்சிறப்புற்றனர். பலர் அறிவியல் அறிஞர்களாகவும் திகழ்ந்தனர். இவ்வறிஞர்கள் யாத்த சங்க இலக்கியங்களைக் கசடறக் கற்ற பேரறிஞர்கள் இன்று நம்மிடையே குறைந்து வருகின்றனர்.

சங்க இலக்கியங்களை நிறைவாகக் கற்றுத் தேர்ந்து, சமய இலக்கியங்களிலும் சீரிய நற்புலமை பெற்று இற்றை நாளில் நம்மிடைச் சங்க இலக்கிய நன்மலையாகவும் சித்தாந்த புலவர் மணியாகவும் காட்சியளித்து வந்தவர் திரு. ந. ரா. முருகவேள் ஆவர். இவர் சங்க இலக்கியப் பாடல்கள் போன்றே பாக்கள் இயற்றுவதில் சிறந்தவர். சங்க இலக்கியச் செய்திகளை விரித்துணர்த்தும்போது, குறிப்பிட்ட இலக்கியத்தின் பாடல் களின் எண், வரிகள், சொற்கள், எழுத்துகள் எத்தனை என்பதை இயல்பாகச் சொல்லவல்ல திறனுடையவர்.

முருகவேள் மேலைநாட்டு அறிஞர்களின் இலக்கியச் செல்வத்தைத் துய்க்குபோது, (எடுத்துக்காட்டாக ஜான் மில்ட்டனின் கருத்துகள்) தமிழ் இலக்கியங்களில் தாம் கண்டு துய்த்து உணர்ந்த அனுபவக் கருத்துக்களுக்கு ஒப்ப அமைந்த குறிப்புக்களைக் கண்டு வியப்புற்று மகிழ்வர். அந்த மகிழ்ச்சி அனுபவத்தைத் தமிழ்க் கருத்துகளுடன் இணைத்துப் பாட லாக யாத்து நமக்களிக்கும்பொது, “ஜான் மில்ட்டன் அவர் களும் இக்கருத்தினையே பாடியுள்ளாரே! அவரும் தமிழ் மொழி கற்ற அறிஞர்போலும்” என நம்மை மயங்க வைப்பர். அத்தகைய ஆற்றல்மிகு பாடலாசிரியர் எடுத்துக் காட்டாக,

“சைவத் திருமுறைகளையும் சைவ சித்தாந்த சாத்திரங் களையும் புறக்கணித்து ஓதுக்காமல், விரும்பிக் கற்று மகிழும் கடப்பாடு உடையவராவர். இம்மை வாழ்வில் இதனின் மிக்க இன்பப் பேறு பிறிது ஒன்றில்லை எனத் துணிந்து கூறலாம். ஜான் மில்ட்டன் எனும் ஆங்கிலக் கவிஞர் பாடுவதுபோல்,

“எத்தகை இன்ப ஊற்றாய் இறையருள் நூல்கள் உள்ளன!
அத்தகை யவற்றை அந்தோ, அறிவிலார் கடினம் என்பர்!

வித்தகக் கண்ணன் ஊதும் வேய்ங்குழல் இசைபோல்
இன்பம்
மீக்கொளிர்ந்து, அறிஞர்க்கு ஆரா விருந்தென மிளிரும்
நன்றே"

— ந. ரா. முருகவேள்.

"How charming is divine Philosophy ! Net harsh and crabbed as dull fords suppose ! But Musical as is Appollo's lute, And a perpetual feast of neetere'd sweets, where no crude surfeit reigns" — John Milton, Comus.

இங்கு மேலே குறித்த ஆங்கிலத்தைப் பார்த்துவிட்டு அதற்கும் மேலே குறிப்பிட்ட பாடலைப் பார்க்கும் போது மில்ட்டன் தான் இக்கருத்தினைத் தமிழ்க் கவிதையாக்கியுள்ளார் என்ற முடிவுக்கு நம்மை வரவைக்கிறார் சிந்தனையாளர் அமரர் முருகவேள்.

திரு. வி. க. அவர்கள், முருகவேள் இயற்றிய "மறைமலையடிகளார் மாட்சி" எனும் நூலின் முன்னுரையில்,

> "அடிகள் நடையும் கொள்கையும் பிறவும் நூற்கண் மலிந்து கிடத்தல் மகிழ்ச்சியூட்டுகிறது. விரிந்த நூல் ஒன்று இந்நூலாசிரியரால் யாக்கப்பெறின் தென்னாடு வளர்ச்சியுறும் என்று நம்புகிறேன் நூலாசிரியருக்கு எனது வாழ்த்து உரியதாக"

என வாழ்த்தி மகிழ்கிறார்

ஆசிரியர் மறைமலையடிகள் ஒருமுறை இவருக்கு எழுதிய கடிதமொன்றில்,

> "......வெண்பாச் செய்யுளில் நீங்கள் வரைந்த கடிதம் வந்தது. செந்தமிழ் உரைநடை வரையுந் திறத்தோடு செய்யுளாக்குந் திறமும் உங்களுக்கு வாய்த்திருத்தல் கண்டு பெரிதும் உவப்புற்றேன். உரையும் பாட்டும் பொருள் பொதுவன ஆக்கும் புலமையிற் தலைசிறந்து நீங்கள் தமிழ்த் தொண்டு ஆற்றி வாழ்க என்று திருவருளை வேண்டும் — மறைமலையடிகள்"

என்று உள்ளம் பூரித்துப் பெருமிதத்தோடு வாழ்த்துகிறார். இவர்களது வாழ்த்துப் பொய்க்கவில்லை, சங்க இலக்கியம்

போன்றே பாடற் பனுவல்கள் இயற்றும் சிறப்பினைப் பெற்று மக்கள் அனைவரும் செல்லமாகப் "புலவரேறு" என அழைத்துப் போற்ற மகிழ்வடைந்தனர்.

இங்ஙனம் புகழாரம் பூண்ட நந்திபுரம் தி. இராமசாமி முருகவேள் அவர்கள் 17—11—1924 இல் இராமசாமி (முதலியார்) க்கும் சிவகாமி அம்மையாருக்கும் மூன்றாவது திருமகனாய்த் தோன்றினார்கள் தாய் தந்தையர் இட்ட பெயர் *சுந்தரராசன்* என்பது. பின்னர் ஆசிரியர் மறைமலை யடிகள் தூய தமிழால் "**முருகவேள்**" என மாற்றி அழைத்தார் கள். இப்பெயரே இவர்தம் புகழைப் பரப்பியது. இங்கு ஆசிரியர் மறைமலையடிகள் தம் இளமையில் நாகையில் வெளி வந்த 'நீலலோசனி' முதலிய இதழ்களில் "முருகவேள்" எனும் புனைபெயரால் மறுப்புக் கட்டுரைகள் எழுதி வந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்க நற்செய்தியாகும்.

எளிமையும் பண்பும் நிறைந்த பெற்றோர்களால் சீரிய முறையில் வளர்க்கப்பட்டார் முருகவேள். இவர்களுடன் பிறந்தாருள் மூத்தவர் இருவர் ஒருவர் புலவர் ந. ரா. தேவராசன், மற்றொருவர் ஒளியகம் ந ரா. ஆடலரசு.

முருகவேள் நன்முறையில் வளர்ந்து கரந்தைப்புலவர் கல்லூரி வாயிலாகச் சென்னைப் பல்கலைக்கழக "**வித்துவான்**" பட்டத்தில் முதல் வகுப்பு மாணவராக 1947 இல் தேர்வு பெற்றார். 1946 இலேயே மதுரைத் தமிழ்ச்சங்கம் நடத்திய "**பண்டிதம்**" தேர்வில் இரண்டாம் வகுப்பில் தேர்வு பெற்றார். பின்னர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் "**பி. ஓ. எல்.**" தேர்வில் 1951 இலும், **எம். ஓ. எல்.**" தேர்வில் முதல் வகுப்பு மாணவராக 1957 லும் தேர்வு பெற்றார். இதன் பின்னர் 1958 இல் சென்னைப் பல்கலைக் கழக **முதுகலையில்** (எம். ஏ.) தேர்வு பெற்றார். இங்ஙனம் எளிய குடும்பத்தில் பிறந்து தாய் தந்தையர் பெருமை கொள்ளும் வகையில் ஊக்கத்துடன் தன்முயற்சியால் சிறந்த பட்டங்களும் ஆழமான புலமையும் பெற்றார்கள்.

இவர் முதன்முதல் சென்னை சிந்தாதிரிப்பேட்டை உயர் பள்ளியில் (1987 49) தமிழாசிரியராகப் பணி ஏற்றார். 1949-51இல் மேற்படிப்பிற்காக ஓய்வு. சென்னை முத்தியாலு பேட்டை உயர்பள்ளியில் 1951-55-ல் பணி. மீண்டும் மேற் படியிற்காக 1956-1957-ல் ஓய்வு. பின்னர்ச் சென்னைக்

கிறித்தவக் கல்லூரியில் 1957 62-வரை தமிழ்த் துணை பேராசிரியராகப் பணிபுரிந்தார்.

இவர் சங்க இலக்கியங்களில் ஆழ்ந்த புலமை பெற்றதுடன் சைவ வைணவ நூல்களிலும் வேதாந்த சித்தாந்த அறிவியலி லும் கூர்ந்த மதி நுட்பமும் ஆராய்ச்சியும் உடையவராய்த் திகழ்ந்தனர். சைவ சித்தாந்தப பேரறிவியலில் தோய்ந்த இவர் தம் உள்ளம் ஆசிரியர் தொழிலை விட்டு. இடைவிடாது மக்களுக்குச் சமய மெய்ஞானத்தில் பயிற்சி அளிக்கவேண்டும் என்ற கருத்தில் திளைத்திருந்தபோது இறையருள் கூட்டி வைக்கத் தமிழக அரசின் அறநிலையத்துறையில் ***"திருக்கோயில்"*** எனும் இதழின் ஆசிரியராக 1962 செப்டெம்பர் முதல் பணி ஏற்றார். 1985 மார்ச்சு வரை 22½ ஆண்டுகள் பணி செய்தார். ஏற்கெனவே சைவ சித்தாந்தப் பெருமன்றம் வெளியிட்டுவந்த ***"சித்தாந்தம்"*** இதழின் ஆசிரியராய் இருந்த அனுபவம் காரணமாகத் "திருக்கோயில்" இதழில் சமய தத்துவ நுட்பங்களைத் தெரிவிக்கும் கட்டுரைகளையும் சைவாகம நெறிமுறைகள் பற்றிய கருத்துகளையும் வெளியிட்டு வந்தனர்.

இத்தகு கல்விப் புகழ் இவரை முறையாகத் தொடர் வதற்குக் காரணம் தமிழ்கலை ஆசிரியர் ***மறைமலையடிகள்*** அவர்களை ஆசிரியராக ஏற்றது தான் எனின் பிழையாகாது. அஃதன்று அதே முறையில் மாம்பாக்கம் குருகுலம் திருக்குறள் பீடம் அழகரடிகளாரிடமும் நேயம் வைத்தார்கள். முருகவேள் சைவ சித்தாந்த நுட்பங்களை விளக்கும்போது சைவாகமங்களி லிருந்தும் திருமுறைகளிலிருந்தும் பெரியபுராணத்திலிருந்தும் எடுத்துக்காட்டுகளை எடுத்துரைக்கும்போது இவர் தம் புலமை நலம், ஆய்வுத்திறன் இன்னபிற தெளிவுறும்போது மறைமலை யடிகளாரின் கூர்ந்த மதிநுட்பமும் நம்முன் தோன்றி தம் அறிவுப் புலனுக்கு இன்பமூட்டுகிறது.

இப்புலவர்மணி சங்க நூல்களில் பெரும்புலமை பெற்றி ருந்தார்கள் என்பதற்கு இவர்கள் பாடிய, "சங்க இலக்கிய மாண்பு" எனும் பாடல் பனுவலே சான்றாகும். இது 72 பாடல்களால் முற்றிலும் வெண்பா யாப்பில் அமைந்தது. இந்நூலுக்கு அணிந்துரை எழுதிய அழகரடிகள், "முருகவேள் தமது தெளிவையும் உணர்ச்சியையும் இக்கவிதை நூலாக வெளிப்படுத்தியிருத்தல் தமிழ்க்கு ஆக்கமானது!" எனப் பாராட்டி மகிழ்கிறார். காரணம் அப்பாடல்களில் ஆசிரியர்

மறைமலையடிகள் நூல்களில் தாம் சுவைத்த பகுதிகள், மற்றும் மனோன்மணீயம், ஜி.பி.ஷா, கா.சு.பிள்ளை, நாவலர் நாட்டாரய்யா போன்றவர்களின் கருத்துகளைச் சுட்டிக்காட்டுவதில் வல்லவராய் விளங்கியதோடு, தொல்காப்பியத்தின் நலன்களைக் குறிக்கும்போது, தொல்காப்பிய நுண்பொருட் கருத்துக்களை மேலும் அறிந்து இன்புற, பா.வே.மாணிக்க நாயக்கர், கா.சு.பிள்ளை, மறைமலையடிகளார், அரசஞ்சண்முகனார் விளக்கங்களைக் காணுமாறு பாடலிலேயே ஆற்றுப்படுத்திக் காட்டும் திறனை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

முருகவேள் தருமை ஆதீனம் தவத்திரு சோமசுந்தரத் தம்பிரான், குன்றக்குடி அடிகள், நாவலர் நாட்டாரய்யா, பண்டிதமணி கதிரேசனார், ஔவை. சு. துரைசாமி, திரு.வி.க டாக்டர் அ. சிதம்பரநாதன், டாக்டர் மா. இராசமாணிக்கனார், டாக்டர் வ.சுப.மாணிக்கம் முதலியவர்களிடையே கொண்ட நெருக்கமான பழக்கம் இவர்களது ஆற்றலை மேலும் வளர்த்துக் கொள்ள துணையாகியது.

மேலும் இப் பண்பாளரை நாடிப் பல பட்டங்கள் வந்து அடைந்த போது அப்பட்டங்களும் சிறப்படைந்தன மதுரை ஆதினம், 'செந்தமிழ்ச் சிவமணி', தருமை ஆதீனம், "சித்தாந்த புலவர் மணி", திருவண்ணாமலை ஆதீனம்," ஞானத் தமிழாகாரர்'', திருக்குறள் பீடம்,''செந்தமிழ் வேந்தர்'' தமிழ்ப் புலவரின்குழு வெள்ளிவிழாவில், ''தமிழ்ச்சான்றோர்''. ஆகிய பட்டங்கள் அணி அணியாய் வந்து சேர்ந்தன. இவரோ பட்டங்களையும் பணத்தையும் விரும்பாது அமைதியான தமிழ்ப்பணியே விழுமியது எனத் தம் வாழ்நாள் முழுவதும் கடைப்பிடித்து வாழ்ந்தார். தருமை ஆதினம் சென்னையில் நடத்தி வந்த மாலைவேளைக் கல்லூரியில் தவறாது சென்று வித்துவான் தேர்வுக்கு உரிய (இலக்கண இலக்கியப் பகுதிகளுக்குரிய விளக்கங்களை) அளித்து வந்தார்.

இந்த ஞானத் தமிழாகரர் தமிழகமெங்கும் உள்ள பல்வேறு நிறுவனங்கள் நடத்திய மாநாடுகள், ஆண்டு விழாக்கள், கோயில் விழாக்கள் முதலியனவற்றில் இறைநெறி பற்றியும் இலக்கியங்கள் பற்றியும் ஆற்றிய விரிவுரைகள் எண்ணற்றன. மேற்படி விழாக்களில் வெளியிட்ட மலர்களிலும், சித்தாந்தம், செந்தமிழ்ச் செல்வி, ஞானசம்பந்தம், குமரகுருபரன் முதலிய இதழ்களிலும் எழுதிய கட்டுரைகள் பலப்பல. இவை எல்லா

வற்றிற்கும் மேலாக 22½ ஆண்டுகள் "திருக்கோயில்" இதழ்களில் எழுதிய கட்டுரைகள் அனைத்தையும் திரட்டிப் பதிப்பித்தால் அவையே தமிழகத்திற்கு வேண்டிய "*சமயங்களின் கலைக்களஞ்சிய*"மாக விளங்கும். இப்பணி சமயநெறி ஆர்வலர்களுக்கு நலம் பல விளைவிக்கும்.

இச்செந்தமிழ் வேந்தர், திருவரங்கம் கோயில் வரலாற்றினைத் தமிழாக்கம் செய்தபோதும், இராமாநுசர் நூற்றந்தாதிக்கு உரை விளக்கம், திருப்பாவை உரை நயங்களின் தொகுப்பு, தொண்டரடிப் பொடியாழ்வார் திருமாலை உரை விளக்கம் ஆகிய நூல்களைப் படைத்தபோது, பிரதிவாதி பயங்கர தவத்திரு. அன்னங்கராச்சாரி சுவாமிகள் முருகவேள் அவர்களின் வைணவ சித்தாந்த அறிவாற்றலைக் கண்டு பெருமிதம் அடைந்து பராட்டிய செய்தியை நாடு நன்கறியும்.

இவர் இயற்றிய நூல்களில், மறைமலையடிகளார் மாட்சி, தமிழ் நாட்டு மில்ட்டன், சங்க இலக்கிய மாண்பு, தருக்க இயல் விளக்கம், கவிதை அஞ்சலி, இலக்கணத்தில் கற்பனைகள், சிவஞானபோதம், சைவ சித்தாந்தம், காமஞ்சான்ற ஞானப் பனுவல் ஆகிய நூல்கள் குறிப்பிடத்தக்கவை.

இத்தமிழ்ச் சான்றோர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும், மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்திலும் அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் நிகழ்த்தியுள்ளார்கள். அடிக்கடி யாழ்ப்பாணம் சென்று பல தொடர் சொற்பொழிவுகள் செய்து புகழ் மலிந்த இக்காலச் சேக்கிழாரானார்.

இவர் 17-7-1947 இல் சரகவதி எனும் தவச்செல்வியை மணந்து இல்லறம் மேற்கொண்டார். கணவரின் திருவினை அறிந்த இத்தவச்செல்வி இல்லறமாம் நல்லறப் பண்பிற்குப் புகழ் சேர்க்க ஓர் ஆண்மகனை ஈன்றார். இராமலிங்கம் எனும் பெயரிட்டுப் போற்றி வளர்த்தனர். அந்நன்மகன் பண்பு நெறியிலே சிறந்து, கல்வியில் சீரும் சிறப்பும் எய்தி, "எம். ஏ.", "எம். எட்.", "எம். பில்" முதலிய பட்டங்கள் பெற்றுள்ளார். இக்குடும்பம் தமிழ் நெறியாகிய வள்ளுவர் வகுத்த இல்லற நெறிக்குப் புகழ் சேர்த்து விளங்குகிறது.

இங்ஙனம் இல்லற நெறியிலும் கல்வி நெறியிலும் புகழ் மணம் பரப்பி விளங்கிய *சங்கத் தமிழ் ஞாயிறு* தமிழகத்தை இருளில் மூழ்கடித்து 7—4—85-இல் ஆடலழகன் அம்பலவாணன் திருவடிகளில் இணைந்துவிட்டது.

தொல்காப்பிய உவமவியல் - காண்டிகையுரை

பேராசிரியர் ச. பாலசுந்தரம்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

தோற்றமாவது: சிறப்பு நலன் காதல் வலி கிழக்கிடுபொருள் என்னும் ஐந்தும் எண் வகைச்சுவைகளும் நிலைக்களமாக வினை பயன் மெய் உரு என்னும் நான்கு வகையாற் றோன்றுதலை. கொளாஅல் = கொளுவுக.

அஃதாவது எழுவகைச் செய்யுள் வாயிலாக நல்லிசைப் புலவோர் தாம் உணர்த்தக்கருதிய பொருளைப் பல்வேறு திறம்பட உவமத்தான் உணர்த்துங்கால் அவர் உணர்த்தும் பொருள் இவை அப்பொருள்களை விளக்க மேற்கொண்ட உவமம் இவை என ஓர்ந்து உவமத்தைப் பொருளொடு புணர்த்தி உணர்த்துக என்றவாறு.

இக்சூத்திரம் ஏனை உவமம் பற்றிய புறனடை என்பது தோன்ற உவமமென வாளா கூறாது உவமத்தோற்றம் என்று விளங்க ஓதினார்.

இதனை ஏனையுவமங் கூறிய அதிகாரத்துக் கூறாமல் ஈண்டுக் கூறியது என்னையெனின்? முன்ன மரபினாற் தேர்ந்து கொள்ளும் உள்ளுறையுவமம்போல வேறுபடவந்த உவமத் தோற்றமும் ஓர்ந்துணர்ந்து அமைத்துக் கொள்ள வேண்டு மென்பதனை அறிவுறுத்தற்கென்க.

எ - டு :- 1) நிலத்தினும் பெரிதே வானினுமுயர்ந்தன்று
நீரினும் ஆரளவின்றே சாரற்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேனிழைக்கும் நாடனொடு நட்பே

இதன்கண் பெருமைக்கு உவமமாக எடுத்துக்கொண்ட பொருள்களை முறையாக உவமித்துக் கூறாமல் உறழ்ந்து கூறியதனான் இதுவேறுபடவந்த உவமத்தோற்றமாயிற்று

(2) நீர்நிலந் தீவளி விசும்போ டைந்தும்
அளந்து கடையறியினும் அளப்பருங்குரையை
(பதிற்-24)

இதன்கண் அளத்தலருமைக்கு எடுத்துக் கொண்ட பொருள்களை உவமித்துக் கூறாமல் வேறு நிறுத்திக் கூறியமையான் இதுவும் வேறுபட வந்த உவமத் தோற்றமாயிற்று.

கழிந்தது பொழிந்தென வான்கண் மாறினும்
தொல்லது விளைந்தென நிலம்வளங் காப்பினும்
எல்லா உயிர்க்கும் இல்லால் வாழ்க்கை
இன்னும் தம்மென எம்மனோர் இரப்பின்
முன்னுங் காண்டிரென நும்மனோர் மறுத்தல்
இன்னா தம்ம இயல்தேரண்ணல் (புறம்-203)

என இவ்வாறு வருவனவும் வேறு நிறுத்த உவமத்தோற்றமாம்

3) அடைமல்கு குளவியொடு கமழும் சாரல்
மறப்புலி உடலின் மான்கணம் உளவோ
மருளின விசும்பின் மாதிரத் தீண்டிய
இருளும் உண்டோ ஞாயிறு சினவின்
அச்சொடு தாக்கப் பாருற் றிரங்கிய
பண்டச் சாகாட் டாழ்ச்சி சொல்லிய
அரிமணல் ஞெமிரக் கற்பக நடக்கும்
பெருமிதப் பகட்டுக்குத் துறையு முண்டோ
....
பொருநருர் உளரோ நீகளம் புகினே (புறம்-90)

இதன்கண் அதியமானின் ஆற்றற்குப் புலி முதலாயவற்றையும் பகைத்துவரும் பொருநர்க்கு மான்கண முதலாயவற்றையும் உவமமாக எடுத்துக்கொண்டு அவற்றை எதிர்வைத்து உவமமாகக் கூறாமல் வினாவாய் பாட்டான் வேறு வைத்துக் கூறினமையான இதுவும் வேறுபடவந்த உவமத் தோற்றமாயிற்று.

4) புலிபார்த் தொற்றிய களிற்றிரை பிழைப்பின்
எலிபார்த் தொற்றா தாகும் மலிதிரை
கடல்மண்டு புனலின் இழுமெனச்சென்று
நனியுடைப் பரிசில் தருகம் ...... (புறம்-237)

இதன்கண் பெருஞ்சித்திரனார் தனக்குப்புலியையும் வெளிமானுக்குக் களிற்றையும் இளவெளிமானுக்கு எலியையும் உவமமாகக் கொண்டு அவற்றை வாயுறைபோலக் கூறிப்

பொருளை உய்த்துணரவைத்தமையின் இதுவும் வேறுபட வந்த உவமத்தோற்றமாயிற்று.

5) நுதலும் முகனும் தோளும் கண்ணும்
இயலும் சொல்லும் நோக்குபு நினைஇ
ஐதேய்ந்தன்று பிறையுமன்று
மைதீர்ந்தன்று முகனுமன்று
வேயமர்ந்தன்று மலையுமன்று
பூவமர்ந்தன்று சுனையுமன்று
மெல்ல இயலும் மயிலுமன்று
சொல்லத்தளரும் கிளியுமன்று (கலி-55)

எனவரும் இதன்கண் நுதல் முதலியவற்றிற்குப் பிறை முதலியவற்றை உவமமாக எடுத்துக்கொண்டு அவற்றைத் தகுமெனக் கூறாமல், காரணங்காட்டி மறுத்துக் கூறியதனான் இதுவும் வேறுபட வந்த உவமத் தோற்றமாயிற்று.

6) ஈங்கே வருவாள் இவள்யார் கொல்
வல்லவன் தைஇய பாவை கொல், நல்லார்
உறுப்பெல்லாங் கொண்டியற்றியாள் கொல் வெறுப்பினால்
வேவண்டுருவங் கொண்டதோர் கூற்றங்கொல்

எனவரும் இதன்கண் தலைவிக்கு உவமமாக எடுத்துக்கொண்ட பாவை முதலியவற்றை உவமத்தன்மை விளங்கக் கூறாமல், ஐயவாய்பாட்டால் பொருள்புலப்படக் கூறினமையான் இதுவும் வேறுபட வந்த உவமத்தோற்றமாயிற்று.

7) ஒருதிறம் பாணர் யாழில் தீங்குரல் எழ
ஒருதிறம் யாணர் வண்டின் இமிழிசையெழ
ஒருதிறம் கண்ணார் முழவின் கரைபெழ
ஒருதிறம் பண்ணார் தும்பி பரந்திசையெழ
(பரி-17)

எனவரும் இதன்கண் யாழிசைக்கும் முழவிசைக்கும் உவமமாக எடுத்துக்கொண்ட வண்டினையும் தும்பியையும் இணைத்து உவமித்துக் கூறாமல் வேறு செயல்போலக் கூறினமையான் இதுவும் வேறுபட வந்த உவமத் தோற்றமாம்.

8) "மதி ஏக்குறூஉம் மாசறு திருமுகம்"

என்பதன்கண் உவமமாக எடுத்துக்கொண்ட மதிக்கு இளிவரல் கற்பித்து வேறாகக் கூறினமையான் இதுவும் வேறுபட வந்த உவமத் தோற்றமாம்.

9) கடந்தடு தானைச் சேரலா தனை
யாங்ஙனம் ஒத்தியோ வீங்குசெலல் மண்டிலம்
பொழுதென வரைதி புறங்கொடுத் திறத்தி
மாறி வருதி மலைமறைந் தொளித்தி
அகலிரு விசும்பினானும்
பகல்விளங்குதியாற் பல்கதிர் விரித்தே

(புறம்-8)

இதன்கண் கதிரவனைச் சேரலாதனுக்கு உவமமாக எடுத்துக் கொண்டு அதனது உவமத்தன்மையை மறுத்துக்கூறிப் பொருளுக்கு உயர்வு கற்பித்துக்கூறினமையான் இதுவும் வேறு படவந்த உவமத் தோற்றமாயிற்று.

10) தொகுமுகை இலங்கெயி றாக
நகுமே தோழி நறுந்தண் காரே (குறு-126)
கண்ணீர்க் கடலாற் கனைதுளி வீசாயோ
கொண்மூக் குழீஇ முகத்து (கலி — 145)

என்றாற்போல உவமத்தையே பொருளாக வைத்துக் கூறுவதும் வேறுபட உவமத்தோற்றமேயாம். இவ்வாறு வருவன வற்றை வட நூலார் ரூபகம் என்ப. இடைக்கால அணியிலக்கண நூலார் அதனை ஏற்று உருவக அணி என வகைப்படுத்துவர்.

இனி இங்ஙனம் பொருளிது பொருளை விளக்க வந்த உவமமிது எனப் பல்வேறு குறிப்பினவாய் உய்த்துணர வருவனவற்றிற்கெல்லாம் இச்சூத்திரமே விதியாகக் கொண்டு அமைத்துக்கொள்க. அவற்றுள் சிலவருமாறு :

கண்ண னவனிவன் மாறன், கமழ்துழாய்க்
கண்ணி அவற்கிவவற்கு வேம்புதார் — வண்ணமும்
மாயனவனிவன் சேயன் மரபொன்றே
ஆயனவனிவன் கோ (பேராசிரியர் மேற்கோள்)

அடிநோக்கின் ஆழ்கடல் வண்ணன்நன் மேனிப்
படிநோக்கின் பைங்கொன்றைத் தாரோன்
— முடிநோக்கின்
தேர்வளவ னாதல் தெளிந்தேன் றன் சென்னிமேல்
ஆரலங்கற் றோன்றிற்றுக் கண்டு (தாண்டிமேற்)

இந்திர னென்னின் இரண்டேகண், ஏறூர்ந்த
அந்தரத்தா னென்னிற் பிறையில்லை—அந்தரத்துக்
கோழியா னென்னின் முகனொன்றே கோதையை
ஆழியா னென்றுணரற் பாற்று.
(முத்தொள்ளாயிரம்)

சுற்றுவிற் காமனும் சோழர் பெருமானாம்
கொற்றப் போர்க் கிள்ளியும் கேழொவ்வார்
— பொற்றொடீ
ஆழி யுடையான் மகன்மாயன் செய்யனே
கோழி யுடையான் மகன் (தண்டி-மேற்)

புனல் நாடர் கோமானும் பூந்துழாய் மாலும்
வினை வகையான் வேறுபடுப—புனல்நாடன்
ஏற்றெறிந்து மாற்றலர்பா லெய்தியபார் மாயவன்
ஏற்றிரந்து கொண்டமையா லின்று (தண்டி-மேற்)

மண்படு தோட் கிள்ளி மதவேழம் வேற்றரசர்
வெண்குடையைத் தேய்த்த வெகுளியால்
—விண்படர்ந்து
பாயுங்கொலென்று பனிமதியம் போல்வதூஉம்
தேயும் தெளிவிசும்பி னின்று (தண்டி-மேற்)

இனி அணி நூலார் வேறுவேறு பெயர்களான் கூறும் உவமக் கூறுபாடுகளெல்லாம் இதன்கண் அடங்குமாறறிந்து அடக்கிக் கொள்க.

சூ. 35 ஒரீஇக் கூறலும் மரீஇய பண்பே.

கருத்து : உவமத்தை மறுத்துரைத்தலும் உவமவிலக்கண வழக்கு என்கின்றது.

பொருள் : உவமம் வேறுபட வருதலேயன்றி உவமத்தைப் பொருளொடு பொருந்தாதென உவமத்தன்மையை

நீக்கிக் கூறலும் மேற்றொட்டு மரபாக மருவிய இலக்கணமேயாம்.

என்றது ஒப்புடைய பொருளை உவமமாக எடுத்துக் கொண்டு அதன் உவமத்தன்மையை ஒவ்வாதென மறுத்துக் நீக்இக் கூறலும் உவமத்தோற்றமேயாம் என்றவாறு

எ. டு. தவள முத்தங் குறுவாள் செங்கண்
குவளையல்ல கொடிய கொடிய (சிலம்பு-கானல்வரி)

எனவும்,

புள்வாய் உணங்கல் கடிவாள் செங்கண்
வெள்வேலல்ல வெய்ய வெய்ய (சிலம்பு கானல்வரி)

எனவும் வரும்.

இவற்றுள் கண்களுக்கு மேற்கோளாக எடுத்துக்கொள்ளப் பட்ட குவளையும், வேலும் முறையே அவள் கண்களுக்கு உரியவாய் நிற்கும் கொடுமையையும் வெப்பத்தையும் பெறாமையான் ஓரீஇக்கூறியமையும், கொடுமையையும் வெப்பத்தையும் அவள் கண்கள் நீக்கியவிடத்து அவை உவம மாக மருவுதற்கு ஒக்குமெனக் கொள்ளவைத்தமையும் கண்டு கொள்க.

காணிற்குவளை கவிழ்ந்து நிலனோக்கும்
மாணிழை கண்ணொவ்வே மென்று (குறள்)

எனவும்

மலரன்ன கண்ணாள் முகமொத்தியாயின்
பலர்காணத் தோன்றல் மதி (குறள்)

எனவும் வருவன அதன்பாற்பாடும். பிறவும் இவ்வாறு வருவனவற்றை ஓர்ந்தமைத்துக் கொள்க.

சூ. 36 உவமத் தன்மையும் உரித்தெனமொழிப
பயனிலை புரிந்த வழக்கத்தான

கருத்து:- உவமத் தன்மையும் உவமத்தோற்றமாதற்கு ஒக்கும் என்கின்றது.

பொருள்:- உவமத்தைப் பொருளோடு உவமித்துக் கூறுதலான் எய்தும் பயனைச் செய்த முறைமையான் உவமத்

தன்மையும் உவமத்தோற்றமாதற்கு உரித்தெனக்
கூறுவர் நூலோர்.

என்றது உவமத்திற்கும் பொருளுக்கும் உரிய பொதுத் தன்மையைச் சிறப்பித்துச் சுட்டிக்கூறினும் அஃது உவமத் தோற்றமேயாம் என்றவாறு

எ-டு :- பாரி பாரி என்று பல வேத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப்புலவர்
பாரி ஒருவனுமல்லன்
மாரியும் உண்டீண்டு உலகுபுரப்பதுவே (புறம்-)

எனவும்

தாம் வீழ்வர் மென்றோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு. (குறள்)

எனவும் வரும்.

உலகைப் புரத்தல் பாரிக்கும் மாரிக்கும் உரித்து என உவமத்திற்கும் பொருளுக்கும் உரிய பொதுத் தன்மையைச் சுட்டிக் கூறினமையான் மாரியை ஒப்பான்பாரி என உவமங் கொள்ள வைத்தமையான் பயனுவமம் தோன்றுமாறு கண்டு கொள்க.

தாம் வீழ்வார் தோளுக்கும் தாமரைக்கண்ணான் உலகிற்கும் பொதுத்தன்மையாகிய இன்பம்உவம தன்மையாக அமைந்து தாமரைக்கண்ணான் உலகொக்கும் தாம் வீழ்வார் மென்றோள் எனப்பயனுவமங்கொள்ள வைத்தமை கண்டுகொள்க.

எனவே இவ்வாறு வருவனவும் உவமத்தோற்றமேயென்றவாறாம்.

சூ. 37. தடுமாறுவமம் கடிவரையின்றே

கருத்து :- உவமத்தைத்தடுமாறிக் கூறினும் ஆம் என்கின்றது.

பொருள்:-இஃது இப்பொருளை ஒக்கும் என வரையறுத்தற்கு இயலாமல் சிலவும் பலவுமாகத் தடுமாறிவரும் உவமமும்நீக்கப்படுதலில்லை.

தடுமாறுவமமும் என்னும் எச்சவும்மை தொக்கு நின்றது. இதனைத் "தடுமாறு வரலும்" என்னும் இளம் பூரணர் பாடத்தான் அறிக.

எ-டு :- கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்
நோக்கமிம் மூன்றும் உடைத்து (குறள்)

எனவரும்.

இம்மூன்றும் உடைத்து என்றதனான் இதுவோ அதுவோ என ஐயவாய்பாட்டான் வரும் வேறுபட வந்த உவமத் தோற்றம் வேறு இதுவேறு என்பது புலனாம். தடுமாறுவமம் என வாளா கூறினமையான்.

மதியும் மடந்தை முகனும் அறியா
பதியிற் கலங்கிய மீன் (குறள்)

என்றாற் போல தடுமாறு கூறலும் கொள்க.

சூ. 38. அடுக்கிய தோற்றம் விடுத்தல் பண்பே
நிரல் நிறுத்தமைத்தல் நிரல் நிறை சுண்ணம்
வரல் முறை வந்த மூன்றலங்கடையே.

கருத்து : உவமம் அடுக்கி வருமாறும் அஃது அடுக்கும் முறைமையும் பற்றிக் கூறுகின்றது.

பொருள் : ஒரு பொருளுக்கு ஒத்த உவமங்களை நிரல்பட அமைத்துக் கூறுதலும்; உவமத்தையும் பொருளை யும் வேறு வேறாக நிறுத்திக் கூட்டிக் கொள்ளுமாறு கூறுதலும் உவமத்தையும் பொருளையும் ஒருங்கு உடன் இணைத்துக் கூறாமல் துணித்து இடையே வேறு சொற்களை அடுக்கிக் கூறுதலுமாகி வரலாற்று முறைமையான் வந்த அம்மூன்று இயல்பினவாக வருதலல்லாதவிடத்து அடுக்கிக் கூறும் உவமத்தோற்றத்தினை நீக்குதல் இலக்கண முறைமையாம்.

என்றது; கவர்பொருள் படாதவாறு உவமங்களை நிரல்பட அடுக்கிக் கூறலும் பொருளையும் உவமத்தையும் நிரல் நிறை யாக அமைத்து அடுக்கிக் கூறலும் உவமத்தையும் ஒரு பொருளையும் ஒருங்கிணைத்துக் கூறாமல் சுண்ணப்பொருள் கோளமைய இடையே சொற்களை அடுக்கிக் கூறலும் நல்லிசைப் புலவோர் செய்யுள் மரபாகலான் அங்ஙனம் அடுக்கிக் கூறும் உவமத்தோற்றம் தொல்லோர் இலக்கண நெறியாகும். அம்மூவகையானன்றிப் பிறவாறு அடுக்கிக் கூறுதல் இலக்கண நெறியன்று என நீக்கி விடுதல் முறைமையாம் என்றவாறு.

1) நிரல்நிறுத்தமைத்தல் என்பது ஒருபொருளுக்கே அதன் பல்வேறு நிலைகளைச் சுட்டியுணர்த்தலை வேண்டியவழிப் பல உவமங்களை நிரல்பட அடுக்கி நிறுத்துதலாகும்.

எ-டு:- ஆய்தூவி அனமென அணிமயிற் பெடையெனத்
தூதுணம் புறவெனத் துதைந்தநின் எழில்நலம் (கலி)

எனவும்

கார்மலர் பூவை கடலிருள் மணியவை
ஐந்தும் உறழும் அணிகிளர் மேனியை (பரி-13)

எனவும்

நிலம் நீர் வளிவிசும் பென்ற நான்கின்
அளப்பரியையே (பதிற்-14)

எனவும் வரும்.

பூவொத் தலமருந்தகைய ஏவொத்து
எல்லாரும் அறிய நோய் செய்தனவே
... ...
குரீஇ ஒப்புவாள் பெருமழைக் கண்ணே (குறு-73)

என்றாற்போல வருவன அதன்பாற்படும்.

2) நிரல்நிறை என்பது: நிரல்நிறைப் பொருள்கோளுக் குரிய இயல்பிற்றாய் அடுக்கி நிறுத்துதலாகும்.

எ-டு:- பொன்னும் மணியும் போல யாழநின்
நன்னர் மேனியும் நாறிருங்கதுப்பும் (குறு-166)

எனவும்

தீயும் வளியும் விசும்பயங்தாங்கு
நோயும் இன்பமும் ஆகின்று மாதோ (நற்-294)

எனவும்

போதும் பணையும் போலும் யாழநின்
மாதருண்கணும் வனப்பின் றோளும் (நற்-166)

எனவும் வரும்

"வரன்முறை என்றதனான்" நிரல்பட அமைதல் முன்றாகவன்றிச் சிறுபான்மை பிறழ்ந்துவரினும் ஆகுமெனக் கொள்க.

எ. டு. விலங்கொடு மக்களனையர் இலங்கு நூல்
கற்றாரோ டேனை யவர் (குறள்)

எனவரும். இந்நிரல் நிறையாகிய அடுக்கினை இடைக்காலத் தெழுந்த அணிநூல் ஒரணியாக நாட்டிப்பல வகைப்படுத்துக் கூறும்

3) சுண்ணம் என்பது : பட்டாங்கமைந்த ஈரடி எண்சீருள் அமைந்த பொருளையும் உவமத்தையும் துணித்துக் கூட்டிக் கொள்ளுமாறு அடுக்கிக் கூறுதலாம்.

எ. டு. மணங்கமழ் மாதரை மண்ணி யன்ன
அணங்குமெய்ந் நின்ற அமைவருகாட்சி
(பொருந-19, 20)

எனவரும்

இவ் ஈரடி எண் சீருள் மணியன்ன அமைவருகாட்சி என்பவற்றைத் துணித்து ஒட்ட உவமமும் பொருளும் இணைந்து விளங்குமாறும் அணங்குமெய்ந்நிறுத்த எனப்பிற சொற்கள் இடைப்பிற வரலாக நிற்குமாறுங் கண்டுகொள்க.

சாறயர்ந்தன்ன மிடாச் சொன்றி
வருநர்க்குவரையா வளநகர் பொற்ப
(குறிஞ்சி-201, 202)

என்பதுமது. சாறயர்ந்தன்ன வளநகர் பொற்ப என இயையும்.

மயிற்குறை கருவி மாண்கடை யன்ன
பூங்குழை யூசற்பொ றைசால் காதின்
(பொருந 29, 30)

என்பதுமது. இது கருவியன்ன காது என இயையும்

இனி ஒரு பொருளை உவமத்தாற் கூறி முடித்துப் பின்னு மோர் உவமத்தை அதற்கே அடுக்கிக் கூறலும் உவமத்திற்குப் பிறிதொன்றை உவமாகக் கூறலும் பிறவும் கவர் பொருள் பட அடுக்கி வந்து வழுவாவனமாம். அஃதாவது

"வாள்போலும் கணையொக்கும் செங்கண்"
"முல்லை நிரைத்தன்ன முத்துப்போல்
வெண்ணகையார்"

என்றாற் போல்வன கவர்பொருள்படுவனவாம்.

"மதியத்தன்ன வாண்முகம் போலும் தாமரை"

என வருவது உவமத்திற்குப் பிறிதொன்றை உவமமாக அடுக்கிக் கூறியதாம். மதியத்தன்ன என்பது தாமரையொடு இயையாமையின் வழுவாம்.

"வெண்டிங்கள் போலுளது வெண்சங்கம் வெண்சங்கின்
வண்டிலங்கு தாழை வளர்கோடு" என்பது மது.

என்றதனான்

இனிப் "பண்பே"
ஈர்ந்து நிலந்தோயும் இரும்பிடித் தடக்கையின்
சேர்ந்துடன் செறிந்த குறங்கின், குறங்கென
மால்வரை ஒங்கிய வாழை வாழைப்
பூவெனப் பொலிந்த ஓதி ஓதி
நளிச்சினை வேங்கை நாண்மலர் நச்சி
(சிறுபாண், 19, 20)

என்றாற்போல ஒன்றற்குப் பொருளாக நின்றது பிறி தொன்றற்கு உவமமாக அமைந்து அடுக்கி வருதலை நிரல் நிறுத்தமைத்தல் என்பதன்பாற் படுத்திக்கொள்க.

பிறவும் இடைக்காலத் தெழுந்த அணிநூல்கள் விரித்தோதும் உவம வேறுபாடுகளை யெல்லாம் எடுத் தோத்தானும் விதப்பானும் இவ்வாசிரியர் கூறிய இலக்கணத்துள் அடங்கு மாறறிந்து அடுக்கிக்கொள்க.

இனி நிரல் 'நிறுத்தமைத்தல்' என்பதனை ஒருவகையாகக் கொள்ளாமல் நிரல் நிறை என்பதற்கு அடைமொழியாகக் கொள்ளின் மூன்றலங்கடையே என்ற தொகை வழூஉப்படு மென்க.

இனிப் பேராசிரியர் "அடுக்கிய தோற்றம் விடுத்தல் பண்பே" என்பதனைப் பிரித்து ஒரு சூத்திரமாகக் கூறுவார். மேலும் அவர் நிரல் நிறுத்தமைத்த நிரல் நிறை எனப்பாட மோதி அதனை ஒரு தொடராக வைத்துச் சுண்ணம் வரை நிலை வைத்த மூன்றலங்கடையே எனப் பாடங்கொள்வார். மூன்றலங்கடை என்பதற்குப் பொருள்கோள் நான்கனுள்

சுண்ணமும் அடிமறியும் மொழி மாற்றும் ஆகிய மூன்றுமல்லாதவிடத்து உவமத்தையும், பொருளையும் நிரலே நிறுத்து ஒப்புமை கூறின் அது நிரல் நிறை உவமம் எனப்படும் என நலிந்தும் வலிந்தும் பொருள் கூறுவார்.

அங்ஙனம் கொள்ளின் 'மூன்றலங்கடையே' என்பது வெற்றெனத்தொடுத்தலாய் முடிதலானும்' அடுக்கிய தோற்றம் என்பது இனிது பொருள் கொள்ளாமையானும், சுண்ணப் பொருள்கோள் அமைய உவமங் கூறுதலை விலக்கின் அது குன்றக் கூறலாய் முடிதலானும் இளம்பூரணர் பாடமே ஆசிரியர் கருத்தாதல் விளங்கும்.

மற்று "நிரல் நிறுத்தமைத்தலும் இரட்டை யாப்பும்" (செய்-87) என்புழி நிரல் நிறுத்தமைத்தல் என்பது நிரனிறுப் பொருள்கோளை உணர்த்தி நின்றதால் எனின் ஆண்டு நால் வகைப் பொருள்கோளுள் அஃதொன்றினை மட்டும் சுட்டிப் பிரித்துக் கூறலான் ஒக்கும், ஈண்டு ஒவ்வாது; என்னை நிரல் நிறை என்பதற்குச் சொல்லதிகார எச்சவியலுள் விளக்கங் கூறப்பட்டமையான் ஈண்டு நிரல் நிறுத்தமைத்தல் என்பதனை நிரல் நிறைக்கு விளக்க அடையாகக் கொள்ளின் அது மிகை படக் கூறலாய்க் குற்றப்படும் அன்றியும் நிரல்படக்கூறும் உவமத்தோற்றம் சான்றோர் செய்யுட்களுள் பயின்று வருதலின் அதற்கு விதி கூறவில்லையாயின் குன்றக் கூறல் என்னும் குற்றந்தங்கும் ஆதலின் அதனை வேறுபிரித்து நயம் படக்கூறினர்ர் ஆசிரியர் எனக்கோட்டலே சால்புடைத்தாகு மென அறிக.

ஏடுகளில் தமிழ் படும் பாடு!

முனைவர் சாலை இளந்திரையன்

எல்லாத் துறைகளிலுமே தமிழகம், தனது தகுதிப்பாட்டில் இருந்து பலபடிகள் தாழ்ந்துள்ளது. குறிப்பாக, தமிழை நல்லபடியாகப் பேசுவது / எழுதுவது என்னும் பொறுப்பைத் தமிழகத்திலே உள்ள பலபேர் மறந்துவிட்டதாகவே தோன்றுகிறது.

இன்னமும் இப்படியா?

சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்பு தமிழ் ஏடு நடத்துவோர் எப்படிப்பட்டோராய் இருந்தனர் என்பதை மிகுந்த வாட்டத்தோடு தமது தமிழியக்கம் சிற்றேட்டில் சொற்சித்திரம் செய்துள்ளார் புரட்சிக்கவிஞர் :

ஆங்கிலத்தில் புலவரெனில்,
அரசினரின் அலுவலிலே
அமர்ந்திருப்பார்;

பாங்குறு செந்தமிழ்ப் புலமை
படைத்தாரேல் பள்ளியிலே
அமர்ந்திருப்பார்;

தீங்குற்ற இசைப்புலமை
சிறிதிருந்தால், படத்தொழிலில்
சேர்ந்திருப்பார் ;

ஈங்கு, இவற்றில் ஏதுமிலார்
தமிழினிலே ஏடெழுதிப்
பிழைக்க வந்தார்.

ஆங்கிலமும் தெரியாது, தமிழும் தெரியாது, வேறெதிலும் புலமை இல்லை எனில், அவர்களே தமிழில் இதழாசிரியர்கள்.

தமிழ்நாட்டின் இந்த வருந்தத்தக்க நிலை, கவிஞர் காலத்தில் இருந்ததை விட இன்று மிகமிகச் சீர்கேடடைந்தே உள்ளது. கவிஞருடைய பாடலில் ஈற்றடியில் உள்ள "பிழைக்க வந்தார்" என்னும் தொடர், ஏதோ செய்து வயிற்றைக் கழுவ வந்தார் என்று மட்டும் பொருள்படவில்லை; தவறு செய்ய வந்தார்கள் (பிழைத்தல் - தவறு செய்தல்) என்னும் பொருளையும் தருகிறது.

அண்மையில், கோவை நகரிலிருந்து புதிதாக வெளிவரும் 'ஜனரஞ்சினி'' என்னும் வார இதழைப் பார்க்க நேர்ந்தது : அன்பளிப்பாக எனக்கு அனுப்பி வைத்தார்கள். புத்தக அளவிலான அந்த இதழின் ஒரே ஒரு பக்க ஆசிரிய உரையில் 27 சந்திப்பிழைகள் இருந்தன.

அதை சுட்டிக்காட்டி நான் கடிதம் எழுதியபோது, ''தங்கள் தமிழ் அன்புக்குத் தலை வணங்குகிறோம்'' என்று எனக்கு நற்சான்று வழங்கினார்கள் ; தவற்றை திருத்திக்கொள்வதாகவும் உறுதியளித்தார்கள். ஆனால், நடந்தது என்ன தெரியுமா? அதன் பிறகு அந்த இதழை எனக்கு அனுப்புவதையே நிறுத்திவிட்டார்கள்.

தினமணி என்னும் நாளிதழ் ஒன்று பலகாலமாக நடந்து வருகிறது. ஆனாலும் ''அன்று கண்ட மேனி அழியாமல்'' இன்றும் பிழைத் தமிழிலேயே வந்து கொண்டு இருக்கிறது. தற்செயலாக என் கண்ணில் பட்ட ஓர் (20—10—85) இதழின் முதல் பக்கத்திலேயே மிக மோசமான ஒரு தமிழ்க்கொலை :

''முகமூடிக் கொள்ளை, வழிப்பறிக் கொள்ளை, சங்கிலி அறுப்பு போன்ற குற்றத்தடுப்பு நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.''

தமிழக அரசின் உள்துறைச் செயலாளர் பத்திரிக்கையாளர்களுக்கு அளித்த பேட்டியின் போது அவர் சொன்ன செய்தியாம் இது. அதாவது, குற்றங்களைத் தடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருப்பதாக அவர் சொல்லியுள்ளார். நமது ''தினமணியோ, இந்த மூன்றும் குற்றத் தடுப்பு நடவடிக்கைகள் என்று பொருள்படும்படியாகத் தமிழ் எழுதியுள்ளது. வாக்கியத்தை மீண்டும் ஒருமுறை படியுங்கள் :

''முகமூடிக் கொள்ளை, வழிப்பறிக் கொள்ளை, சங்கிலி அறுப்பு போன்ற குற்றத்தடுப்பு நடவடிக்கைகள்'' என்றால் என்ன பொருள்? இவை மூன்றும் குற்றங்கள் அல்ல,— குற்றத் தடுப்பு நடவடிக்கைகள் இவை என்று பொருள்தரவில்லையா ? நல்ல தமிழ் தெரிந்தவர்கள் இந்த வாக்கியத்தைப் பின்கண்ட விதமாக எழுதியிருப்பார்கள் :

''முகமூடிக் கொள்ளை, வழிப்பறிக் கொள்ளை, சங்கிலி அறுப்பு போன்ற குற்றங்களைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன'' ஒரே ஒரு இடத்தில் சருக்கியதால், தமிழே தலைகீழாக விழுந்துவிட்டது.

நன்றன்று

தமிழறியாதார் தமிழ் இதழ் நடத்தித் தமிழ்க்கொலை புரிந்து வந்த வரலாற்றில், "தினத்தந்தி"க்காரர், சந்திகளை அடியோடு ஒழித்துத், தமிழையே சாந்து இல்லாத செங்கல் சுவராக்கி நிறுத்தினார். கேட்டவர்களிடம், பாமரமக்கள் இப்படித்தான் பேசுகிறார்கள் என்று ஒரு பெரிய மனிதப் பதிலைத் தந்தார், அவரே, "தின தந்தி" என்று போடாமல், தினத்தந்தி என்று, ஏன் சரியாக எழுதினாரோ தெரிய வில்லை ...

1967 முதல் ஆட்சிக்கு வந்த தமிழ்க்கட்சிகளும், ஏனோ இதழ்களின் தமிழ்க்கொலையத் தடுத்து நிறுத்த எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. பேச்சுத் தமிழில் கொச்சையையும் அயல்மொழி ஒலிகளையும் சொற்களையும் புகுத்திய, தமிழறியாத தமிழர்கள் எழுத்துத் தமிழிலும் அவை களைத் தொடர்ந்து செய்து வருகிறார்கள். நிலைமை இப்படியே நீடித்தால், ஒவ்வொரு தமிழ் இதழின் தமிழுக்கும் ஒரு தனி இலக்கணம் வகுக்க வேண்டிய நிலை உருவானாலும் வியப்படைவதற்கில்லை.

வன்முறை வளரவா?

ஓர் அரசு என்பது எல்லோருக்கும் நல்ல பிள்ளையாக, ஊமைப்பிள்ளையாக இருக்க முடியாது; நல்லவற்றிற்கே துணை நிற்கும் பிள்ளையாக அது விளங்கவேண்டும். குறிப்பாக பொதுச் சொத்துகள் அழிக்கப்படும் போது அரசு மவுனம் சாதிக்க முடியாது. கட்டிடங்களும், எந்திரங்களும், வண்டி வாகனங்களும் மட்டுமே பொதுச் சொத்துகள் அல்ல; ஓர் இனத்தின் மொழி, கலை, பண்பாடு போன்றவைகளே முதன்மையான பொதுச் சொத்துக்கள். அவைகளுக்கு அழிவோ இழிவோ தேடுகிறவர்களை அரசு சும்மா விடக்கூடாது. அதே போல், மக்களின் நன்மதிப்பைப் பெற்ற தமிழ் அறிஞர்கள்,— உயர் தமிழ்ப் பதவிகளில் வீற்றிருக்கும் தமிழ் பெருமக்கள்,— தமிழுக்கு எந்தக் கேடு நடந்தாலும், காந்தியார் பொம்மைகள் போல, கண்ணையும் காதையும் வாயையும் பொத்திக் கொள்ளக் கூடாது; சமுதாயப் பொதுச் செல்வமாகிய மொழி சிலபேரால் சிதைக்கப்படும்போது, அரசும் தமிழ்ப் பெரியவர் களும் எழுந்து நின்று குரல் கொடுத்துத், தீங்கைத் தடுக்க வேண்டும். அவர்கள் சும்மா இருந்தால், இதற்காகவும் நாட்டிலே வன்முறை வெடிப்பதைத் தவிர்க்க முடியாது.

சுவடியில் ஒரு காலக்குறிப்பு

எஸ். சௌந்தரபாண்டியன், எம். ஏ (தமிழ்), எம்..ஏ (ஆங்கிலம்),
பி எட், டிப், வ. மொ.

சுவடி இயலின் (Manuscriptology) முழுப்பரப்பும், தமிழைப் பொறுத்தவரை, இன்னும் அறிந்து குறிக்கப்படவில்லை.

ஓலைச் சுவடியிலுள்ள ஒரு கலம்பகத்தை எடுத்து, யாப்பிலக்கணப்படி சீர்பிரித்து அச்சுப்போடுவதே சுவடியியல் என்ற கருத்தே தற்போது உளது.

சுவடியில் உள்ள பல்வேறு அறிவியல் பிரிவுகளில், சுவடியிற் குறிக்கப்பட்டுள்ள காலக்குறிப்பைச் சரிவர ஆய்வதும் ஒன்று.

இச்சுவடி அறிவியல் கட்டுரை, ஒரு சுவடியிற்கண்ட காலக் குறிப்பைப் பல கோணங்களில் ஆய்கிறது.

சென்னை, அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் *தெய்வசிகாமணிமாலை* (டி. 2061) ***மேசிகருதம்மாள் அம்மானை*** (டி. 2050), ***சித்தேரியம்மாள் அம்மானை*** (டி. 2409) ஆகிய மூன்று நூற்களும் ஒரே தாள்கட்டில் (One paper manuscript bundle) உள.

முதல்நூல் இறுதியில், '*தஅள உயஎ ஞ நொவம்பர் மீ*' என்று காலக்குறிப்பு உள்ளது.

இரண்டாம் நூல் இறுதியில், '*தஅள உயஎ ஞ அக்டோபர் மீ*' என்னும் குறிப்பு உள்ளது.

மூன்றாம் நூல் இறுதியில் '*தஅள உயஎ ஞ **டிசம்பர்** மீ*' என்ற குறிப்பும், அதன்கீழ் 'தொடை விபரம்' ஒரு பத்தியும் அதனைத் தொடர்ந்து '***தஅள உயஎ செப்டம்பர் மீ யெழுதினது***' என்ற குறிப்பும் காணப்படுகிறது.

மூன்றாவது காலக்குறிப்பு சிக்கல் உள்ளது.

அதில், ***டிசம்பர்*** மாதம் என்ற குறிப்பின்கீழ், **செப்டம்பர்** மாதம் எனும் குறிப்பு எப்படி வந்தது? காலமுரண் அல்லவா? ஆகவே, டிசம்பர், செப்டம்பர் இரண்டில் ஒன்று பிழையாக இருக்க வேண்டுமா?

டிசம்பர் என்று மட்டும்போடாது, டிசம்பர் பதிமூன்று என்று நாளும் குறித்திருந்தால், அதில் பிழை நேர்ந்திருக்காது

என்ற எண்ணம் மேலோங்கியது. அப்படியானால், செப்டம்பர் மாதம் எனப் போட்டதில் பிழை இருக்கலாம் அல்லவா? பிழை இருக்கலாம் என ஏற்க இயலவில்லை. ஏனெனில், 'தஅளஉயஎ ஞூ செப்டம்பர் மீ யெழுதினது' என எழுதி அதன்கீழ், அடிக்கோடும் சுருள்சுருளாக இடப்பட்டுள்ளது. இந்த அடிக்கோடும், நிதானமான கையெழுத்தும் குறிப்பும் எழுதியவர் விரைந்து எழுதவில்லை என்பது பெறப்பட்டது; பெறவே, பிழைநேர வாய்ப்பு இல்லை என்ற எண்ணம் படிந்தது.

பின், கால முரண் எப்படி வந்தது?

"மூன்றாம் நூலை, 1827 செப்டம்பரில் எழுதியிருப்பார். பிறகு அக்டோபர், நவம்பர் மாதங்களில் முதலிரு நூற்களை எழுதியிருப்பார். அதன்பின் டிசம்பரில் தொடை விபரம் பத்தியை எழுதியிருப்பார்" என்ற எண்ணம் எழுந்தது.

அப்படியாயின், தொடை விபரம் எழுதியபின், அந்தப் பத்தியின் கீழ் டிசம்பர் என்று எழுதியிருக்கலாம் அல்லவா? ஏன் எழுதவில்லை? வினாத் தோன்றுகிறதல்லவா?

தொடை விபரம் எழுதியபின், அதன்கீழ் டிசம்பர் என்று குறித்தால், அதன் முன்னே உள்ள நூல் முழுவதுமே டிசம்பரில் எழுதியதாக ஆகிவிடும் என்பதற்காக அந்தப்பத்தியின் தலைப்பில் டிசம்பர் 13 எனக்குறித்துள்ளனர் என்பதே அவ்வினாவிற்கு உரிய விடையாகும்.

அங்ஙனமாயின், நூலை முடித்து 1827 செப்டம்பர் மாதம் என எழுதி, பின்னர் அக்குறிப்புக்கும் நூல் முடிவிற்கும் இடையில் தொடை விபரம் எழுதுமளவுக்கு அங்கே இடம் விட்டிருக்க வேண்டுமே, அப்படி இடம் விடல் சுவடி மரபில் உண்டா?

இந்தச் சிக்கலைத் தீர்க்க, முதலிரு நூற்களின் இறுதிப் பகுதிகள் ஆயப்பட்டன.

இரண்டாவது நூலின் இறுதியில், நூல் முடிந்ததும் கீழே நிறைய இடம் விட்டுத்தான் அதன்பின் காலக்குறிப்பு எழுதப் பட்டுள்ளது கண்டறியப்பட்டது.

எனவே, சுவடியில் நூல் முடிந்ததும் சற்று இடம்விட்டு அதன்பின்னே குறிப்பு எழுதும் பழக்கமும் இருந்துள்ளது என்று உணரப்பட்டது.

அடுத்து, வேறொரு சிக்கல் தீர்க்கப்பட வேண்டியதாயிற்று.

முதல் நூல் நவம்பரில் முடிந்திருந்தால், இரண்டாம் நூல் அக்டோபரிலும், மூன்றாம் நூல் நவம்பரிலும் எப்படி முடிய இயலும் ? கால முரண் இங்கும் உளதே ?

அந்நாளில், கட்டு செய்யப்பட்ட (Bound) புத்தகங்களை (Note Books) வைத்துக்கொள்வதில்லை. தனித்தாள்களிலே தான் பக்கங்களிட்டு வைத்துக்கொள்வர். ஆகவே, ஆய்வுக்குட் பட்ட மூன்று நூல்களையும், தனித்தனியாக ஒன்றிலிருந்து எண் இட்டு, மூன்று பிரிவாக இருந்ததை, கட்டுச் செய்தவர், முதல் நூலை மூன்றாவது இடத்திலும், மூன்றாம் நூலை முதல் இடத்திலும் அமைத்துக் கட்டுச் செய்துவிட்டார். இதுவே மேலைக் காலமுரண் ஏற்பட்டதன் காரணமாம்.

ஆய்வு முடிந்ததா ? இல்லை, வேறொரு கேள்வி பிறந்தது. குறிப்பிட்ட மூன்று நூல்களும் ஓலையில் இருந்து தாளுக்குப் பெயர்த்து எழுதப்பட்டிருக்கவேண்டும், அங்ஙனமாயின் இச் சிக்கல்கள் யாவும் ஓலையிலேயே இருந்தனவா? தாளில் புதிதாக ஏற்பட்டனவா ?

இவ்வினாக்களுக்கு விடைகாண, தாள்சுவடியின் தாட்கள் ஆயப்பெற்றன. அத்தாட்களில் நீர்க்குறிகள் (Water marks) இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டன. அவை பின்வருமாறு இருந்தன.

II - ஆம் நூலில் (பக்கம் 27) - 1823
I - ஆம் நூலில் (பக்கம் 19) - 1824
III - ஆம் நூலில் (பக்கம் 63) - 1824

நீர்க்குறிகளில் இவ்வாறு ஆண்டுகள் குறிக்கப்பட்டிருந்தன.

1827-க்குப் பின் உள்ள ஆண்டாக நீர்க்குறியில் இருந்தால், 1827 என ஓலையிலேயே குறிக்கப்பட்டு இருந்திருக்கும் என்ற முடிவு தோன்றலாம். தாளின் காலம் 1827க்கு முன்பு என நீர்க்குறியால் முடிவு செய்யப்பட்டதால் தாளில் நூல் எழுதப் பட்ட காலங்களே அம் மூன்று காலக்குறிப்புகளுமாம் என்ற கருத்துத் தோன்றியது.

மேலும், காலக்குறிப்புகளை மீண்டும் ஆய்ந்தபோது, அவற்றுடன் '*இது தொம்பைய பிள்ளைக்குச் சொந்த மென்றறியவும்*' என்பதும் எழுதப்பட்டிருந்தமை காணப்பட்டது.

எனவே, தாள் சுவடியின் சொந்தக்காரர் தொம்பைய பிள்ளை என்பதும், அவரே அம் மூன்று காலக்குறிப்புக்களையும் வரைந்தவர் என்பதும் தெளிவாயின.

இவ்வாறு காலக்குறிப்பாய்வு ஒருவாறு முடிந்தது.

சில நாட்களின் பின், மூன்றாம்நூல் (கித்தேரியம்மாள் அம்மானை) அச்சிட்ட வடிவில் கிடைத்தது (மதுரை, 1947), அதில், தொடை விபரம் என்ற பகுதியே இல்லை!

எனவே, தொடைவிபரம் நூலோடு இருக்க வேண்டிய பகுதி இல்லை என்பதும், தாள் சுவடிக்காரர் பின்பு அவராகவே எழுதிக் கொண்டது என்பதும், அதனால் தான் அதன்மேல் 1827 டிசம்பர் என்று குறித்தார் என்பதும் வலுவடைந்தது

கட்டுரையாளர்க்கு...

தாங்கள் தமிழ்ப் பொழிலுக்கு அனுப்பும் ஆய்வுக் கட்டுரையை முழு நீளத் (Fool scap) தாளில், அடிக்குறிப்புகள் அவ்வப் பக்கத்தின் கீழ் அமையுமாறு தெளிவாகத் தட்டச்சு செய்து முதல் இரண்டு படிகளை அனுப்பியுதவுக.

பொருள் நிலைக்குச் சாரியை உதவுகிறதா ?

தன்னக்குறிச்சி **வை. தங்கமணி**

தொல்காப்பியர் பெயர்ச் சொல்லின் இலக்கணம் உணர்த்தும் போது:

எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே"

என்பார். ஆனால் நன்னூலார்

"எழுத்தே தனித்தும் தொடர்ந்தும்
பொருள் தரின் பதமாம்"

என்பார், அஃதாவது 'இறிஞி, மிறிஞி' பதமாக நிற்பினும், இவை பொருள் தராதாகையில் 'பொருள்தரின் பதமாம்' என்றார் என்பர் சங்கர நமச்சிவாயர்.

சேனாவரையர் 'முயற்கோடு' — 'யாமை மயிர்க் கம்பலம்' என்பவை பொருள் தரவில்லையே எனின் அவை தொடர் மொழிகள் ஆகையால், அவைகள் பொய்ப் பொருள் குறிப்பனவும், மெய்ப்பொருள் குறிப்பனவும் என இருவகைப்படும். அவ்வகையில் மேலே காட்டியவை பொய்ப்பொருள் குறிப்பனவாகக் கொள்க' என்பார் மேலே காட்டிய தொல்காப்பியர் நூற்பாவிற்கு.

தொல்காப்பியரும், நன்னூலாரும் சொற்களைப் பற்றியே கூறுகிறார்கள். என்றாலும் நன்னூலார் ஓரெழுத் தாயினும் பொருள் தரநின்றால்தான் சொல்லாகக் கருதப்படும், அற்றேல் எழுத்துகள் தொடர்ந்து சொல்லாக வந்திருந்தாலும் சொல்லாகக் கருதப்பட மாட்டாது என்று கூறியதற்குப் பொருள் தரும் சொற்களை வைத்தேயாம் என்று மயிலைநாதரும், சங்கர நமச்சிவாயரும் விளக்கம் தந்து துணை நிற்பார்கள்.

ஆனால் தொல்காப்பியருக்குத் துணை நிற்பவரான சேனாவரையர் 'சொல்லை' வைத்து விளக்காது தொடரை வைத்து விளக்கியிருப்பது பொருந்துவதாகப் படவில்லை. என்றாலும் தொல்காப்பியர் நோக்கம் என்ன ?

சொற்களின் பாகுபாடு உணர்த்தும் போது
'சொல்லெனப் படுப பெயரே வினையென்
றாயிரண் டென்ப அறிந்திசினோரே'

அறிந்தோர் பெயர் வினையென இண்டாகவே சொல்வர் என்றாலும்,

> 'இடைச்சொல் கிளவியும், உரிச்சொல் கிளவியும்
> அவற்றுவழி மருங்கில் தோன்றும் என்ப'-

என்று இடை, உரி- பெயரையும், வினையையும் சார்ந்து தோன்றும் என்றும், பின்னது இரண்டும், முன்னது இரண்டினையும் போல் சிறப்பின்மையாயினும் அவைகளையும் சொற்களாகவே கருதவேண்டும். ஆகையால் தான் 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்றார் எனலாம்.

இடைச் சொல்லின் இயல்பினை:

> 'இடையெனப் படுப பெயரோடும் வினையொடும்
> நடைபெற்றிலுந் தமக்கியல் பிலவே',

என்றும் அதன் பாகுபாட்டினை உணர்த்தும்போது

> 'அவை தாம்
> புணரியல் நிலையிடைப் பொருள் நிலைக்குதநவும்
> வினைசெயன் மருங்கில் காலமொடு வருநவும்
> வேற்றுமைப் பொருள் வயின் உருபாகுநவும்
> அசை நிலைக் கிளவி யாகி வருநவும்
> இசை நிறைக் கிளவியாகி வருநவும்
> தத்தம் குறிப்பிற் பொருள் செய்குநவும்
> ஒப்பில் வழியாற் பொருள் செய்குநவும் என்று
> அப்பிண் பினவே நுவலுங் காலை'

என்றும், அவை நிற்குமிடமும் வேறுபாடும் உணர்த்துமிடத்து

> 'அவை தாம்
> முன்னும் பின்னும் மொழியடுத் துவருதலும்
> தம்மீறு திரிதலும் பிறிதவண் நிலையலும்
> அன்னவை யெல்லாம் உரிய என்ப'-

இவ்வாறு இடைச் சொல்லின் இயல்பும், பாகுபாடும், நிற்கும் இடமும் வேறுபாடும் உணர்த்துகிறார்.

இவ்வாறு தொல்காப்பியர் மூன்று நூற்பாவாகப் பாடியதை நன்னூலார் ஒட்டுமொத்தமாக ஓரே நூற்பாவில்:

'வேற்றுமை வினை சாரியை ஒப்பு உருபுகள்
தத்தம் பொருள இசைநிறை அசைநிலை
குறிப்பென் எண் பகுதியில் தனித்தியல் பின்றிப்
பெயரினும், வினையினும் பின்முன்னோரிடத்து
ஒன்றும் பலவும் வந்து ஒன்றுவது இடைச்சொல்'

என்று அமைத்துக் காட்டுவார்.

இடைச்சொல் என்றால் என்ன? என்பதற்கு உரைகாரருள்: 'பெயர்ச் சொல்லும், வினைச்சொல்லும் ஆகாது அவற்றின் வேறும் ஆகாது இடைநிகரனவாய் நிற்றலின் இடைச்சொல்' என்று மாதவச் சிவஞான முனிவரும், 'சாரியை' என்றதன் பொருள் வேறாகி நின்ற இருமொழியுந் தம்மிற் சார்தற் பொருட்டு இயைந்து நிற்பது' என்று உச்சிமேற் புலவர் கொள் நச்சினார்க்கினியரும், 'சாரியையாவது சொல் தொடர்ந்து செல்லும் நெறிக்கண் நின்று அதற்குப் பற்றுக் கோடாகச் சிறிது பொருள் பயந்தும் பயவாததுமாய் நிற்பது' — என்று அடியார்க்கு நல்லாரும் கூறுவர்.

இங்குக் காட்டப்பட்ட உரைகாரர் மூவரும் தத்தமது கருத்துகளை வலியுறுத்திச் சென்றிருந்தாலும் நோக்கம் ஒன்றே. அஃதாவது ஒட்டப்பட முடியாத இரு உலோகங்களை ஒட்டுவதற்குப் பற்றாசு இடுவதுபோல் — பொருள் பொருத்தமுற இரண்டு சொற்களுக்கு இடையிலோ — அன்றிச் சொல்லின் முன்னோ பின்னோ நின்று பொருள் நிலைக்கு உதவுவது இடைச்சொல் எனலாம்.

என்றாலும், எல்லாருடைய கருத்துகளுக்கும் ஒப்பமுடிந்த நூற்பாவினைத் தொல்காப்பியர் கூறியிருந்தாலும் ஏனைய இலக்கணிகளில் இருந்து மாறுபட்டு இடைச்சொல் இல்லையேல் பொருள் நிலை இல்லை. எண்ணும் பொருள் வேண்டுமேல் இன்ன இடைச்சொல் நிறுத்த சொல்லுக்கும் குறித்துவரு கிளவிக்கும் இடையில் வரவேண்டும் புணரியல்நிலையடிப் படைப் பொருள் நிலைக்குத்தநவும்' என்று எச்சொல்லுக்கும் இல்லாச் சிறப்புத் தந்திருப்பது சிந்திக்க வேண்டும்.

அவ்வாறு சிந்தித்து, எண்ணி அவர் வழிச் சென்றால் 'சே' என்ற ஓரெழுத்துச் சொல், மரத்தையும் மாடு என்ற விலங்கையும் குறிக்கும் பொதுச் சொல்.

'சே + கோடு' என்ற புணர்மொழி மரத்தின் கிளையைக் குறிப்பதா? அல்லது மாட்டின் கொம்பைக் குறிப்பதா? என்ற ஐயப்பாடு நமக்கு எழும்போது சாரியை வந்து துணை புரிகிறது.

எவ்வாறு :

மரத்தின் கிளையைக் குறிக்க 'சேங்கோடு' என்ற சாரியை இன்றிப் புணரும்.[1] ஆனால் மாட்டின் கொம்பைக் குறிக்கச் 'சேவின்கோடு' என்று 'இன்'சாரியை பெற்றுப்புணர்ந்து[2] புணர் நிலைக்குச் சாரியை உதவுவதைக் காணலாம்.

'ஆண்' என்ற பெயர் ஆண்மையையும் சுட்டும். ஆண் என்ற ஒருவகை மரத்தையும் சுட்டும் பொதுச்சொல்.

'ஆண் + பூ' என்ற புணர்மொழி' 'ஆண்' தண்மையை உடைய பூவைக் குறிப்பதா? அல்லது 'ஆண்' மரத்தினது பூவைக் குறிப்பதா? என்ற ஐயம் ஏற்படும்போது அங்குச் சாரியை தோன்றித் துணை புரிவதைக் காணலாம்.

எவ்வாறெனின்

'ஆண் + பூ' 'ஆண்பூ' என்று சாரியை இன்றி இயல்பாகப் புணருமானால் 'ஆண் பூ' - 'பெண் பூ' என்பது போலாகும்[3] ஆனால் 'ஆண் + பூ' 'ஆணம் பூ' என்று 'அம்' சாரியை பெற்றுப் புணருமானால் 'ஆண்' என்ற மரத்தினது 'பூ' என்று பொருள் தரும்.[4] அவ்வாறு பொருள் தர இடைச் சொல் பொருள் நிலைக்கு உதவுவதைக் காணலாம்.

'மா' என்ற ஓரெழுத்துச் சொல் மரத்தையும் விலங்கையும் குறிக்கும் பலபொருள் ஒரு சொல்.

'மா + காடு' என்ற புணர்மொழி மாமரங்களை உடைய காட்டைக் குறிப்பதா? அல்லது விலங்குகள் நிறைந்த காட்டைக் குறிப்பதா? என்ற ஐயம் உண்டாகும் போது உற்றுழி உதவும் சாரியை தோன்றித் துணை நிற்பதைக் காணலாம்.

---

1. 'சே என் மரப்பெயர் ஒகிமர இயற்றே' : தொல். எழுத்து : 297
2 'பெற்ற மாயின் முற்ற இன் வேண்டும் : தொல், எழுத்து : 280
3. 'ஆணும் பெண்ணும் அஃறிணை இயற்கை : தொல். எழுத்து : 304
4. 'ஆண்மரக் கிளவி அரைமர இயற்றே' : தொல். எழுத்து : 305

'மா + காடு : மாங்காடு' என்று புணருமானால் மரங்கள் நிறைந்த காடு என்றும்[5], 'மா + காடு' 'மாவின் காடு' என்று 'இன்' சாரியை பெற்றுப் புணருமானால்[6] விலங்குகள் நிறைந்த காடு என்று பொருள் தரும். இங்கும் பொருள் நிலைக்குச் சாரியை உதவுவதைக் கண்டின்புறலாம்.

'ஆறு' என்ற சொல் 'எண்ணையும்', 'நதியையும்' குறிக்கும் பொதுச் சொல். 'ஆறு + இல்' 'ஆறனில்' என்று 'இன்' சாரியைப் பெற்றுத் தான் புணரவேண்டும்.[7] அப்போது தான் எண்ணுப் பெயரைக் குறிக்கும். 'ஆறில்' என்று புணருமேல் எண்ணுப் பெயரைக் குறிக்காது. அவ்வாறு புணர்ப்பது பிழையுடைத்தாகும்.

ஆற்றினைக் குறிக்கவேண்டுமேல் ஒற்று இரட்டித்துப் (ஆறு + இல் : ஆற்றில்) புணரவேண்டும்[8] இங்கும் சாரியை நமக்குக் கைகொடுப்பதைக் காணலாம்.

'ஏழு' என்ற முற்றுகரச் சொல் 'ஏழு + ஐ' ஏழை என்று புணருமானால் வறியவரைக் குறிக்கும்.[9] எண்ணும் பெயரைக் குறிக்கவேண்டுமேல் 'ஏழு + ஐ' : 'ஏழனை' என்று 'அன்' சாரியைத் தோன்றித்தான் புணரவேண்டும்.[10] இவ்வாறு நம் எண்ணம் ஈடேறச் சாரியை உதவுவதைக் காணலாம்.

ஆக இது சாரும் சிறப்புடைய சொல்-சிறப்பில்லாச் சொற்களைக் கண்டு, உரையாசிரியர்கள் கருத்துக்களையும் பார்த்து எவ்வாறு இடைச்சொல் பொருள் நிலைக்கு உதவு கிறது என்பதனையும் ஒரு சில எடுத்துக்காட்டுகள் மூலம் கண்டு களித்தோம்.

---

5 6. 'மாமரக் கிளவியும் ஆவும் மாவும்
ஆமுப் பெயரும் அவற்றோரன்ன
அகரம் வல்லெழுத்துத் தலையவன் நிலையா
னகரம் ஒற்றும் ஆவும் மாவும் — தொல் எழுத்து : 232

7. 'குற்றிய லுகரத்திறுதி முன்னர்
முற்றத் தோன்றும இன்னென் சாரியை — தொல் எழுத்து 196

8. 'நெட்டெழுத் திப்பர் ஒற்றுமிகத் தோன்றும்
அப்பாயான மொழிகள் அல்வழியான — தொல் எழுத்து 197

9. 'அன்னென் சாரியை ஏழன் இறுதி
முன்னர்த் தோன்றும் இயற்கைத் தென்ப' — தொல், எழுத்து : 195.

10. 'ஏழென் கிளவி உருபியல் நிலையும்' — தொல், எழுத்து : 389.

ஐந்தாவது தேசிய ஒருமைப்பாட்டுத் தமிழ்ப் பயிற்சிப் பாசறை நிறைவு விழா

தொகுத்தவர்: மோ. தமிழ்மாறன்

இந்திய நடுவணரசின் மொழியியல் நிறுவனங்களுள் ஒன்றான மைசூரிலுள்ள தென் மண்டல மொழிப் பயிற்று மையத்தின் (Southern Regional Language Centre) சார்பாகக் கரந்தைப் புலவர் கல்லூரியில் ஐந்தாவது தேசிய ஒருமைப் பாட்டுத் தமிழ்ப் பயிற்சிப் பாசறை பத்து நாட்கள் நடை பெற்றது.

20—10 - 1985-இல் தொடங்கிய இப் பாசறையின் நிறைவு விழா 29—10—1985 அன்று கரந்தைத் தமிழ்ப் பெருமன்றத்தில் நிகழ்ந்தது. காலை 9 மணிக்குத் தொடங்கிய விழாவிற்குக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் திருமிகு ச. **இராமநாதன்** தலைமை யேற்றார். பாசறையின் ஒருங்கிணைப்பாளர்களில் ஒருவரான டாக்டர் ந. நடராசப்பிள்ளை அவர்களால் வரவேற்புரை நிகழ்த்தப்பெற்றது. இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனமாகிய (Central Institute of Indian Languages) தென்மண்டல மொழிப்பயிற்று மையம் (Southern Regional Language Centre) இப்பாசறையை ஏற்பாடு செய்ததின் நோக்கத்தை எடுத்துரைத்தார். அவர்தம் வரவேற்புரையில்,

''பல்வேறு மாநிலங்களைச் சார்ந்த மாணவர்கள் தங்களது தாய்மொழியல்லாத பிறமொழி வழங்கும் மாநிலத்தின் முக்கிய ஊர் ஒன்றில் சில நாட்கள் தங்கி, அம்மொழியைக் கற்றுக் கொள்வதால் அம்மொழி வழங்கும் மாநிலத்தின் பண்பாடு, நாகரிகம், மொழியமைப்பு, அதன் சிறப்பு ஆகிய வற்றை அறிந்து கொள்வதோடு, தங்களோடு பயில வந்துள்ள பிற மாநில மாணவர்களிடம் பழகுவதன் மூலம் அவர்களுடைய பழக்க வழக்கங்களையும் ஓரளவு தெரிந்துகொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது. அதன் மூலமாக மாணவர்களிடையே ஒற்றுமை உணர்வை ஊட்டி, ஓரளவு தேசிய ஒருமைப்பாட்டிற்குத் தன்னாலான பணியைத் தென் மண்டலமொழிப் பயிற்று மையம் செய்து வருகின்றது'' என்று தெரிவித்தார்.

திருமிகு ச. **இராமநாதன்** அவர்கள் தமது தலைமை யுரையில்,

''தேமதுரத் தமிழோசையை உலகமெலாம் பரவச் செய்ய வேண்டும் என்ற பாரதியின் குறிக்கோளை இயன்ற

வரையிலும் நிறைவேற்றுவதற்காகத் தோற்றுவிக்கப்பெற்று, அதற்காகவே நாடொறும் உழைத்து வருகிறது கரந்தைத் தமிழ்ச்சங்கம். அத்தகைய பணியைச் செம்மையாகச் செய்து வரும் எங்களது கரந்தைத் தமிழ்ச்சங்கத்தில் பத்து நாட்கள் தங்கித் தமிழ்கற்கப்பிறமாநிலங்களைச் சார்ந்த மாணவர்களை அனுப்பி வைத்த தென்மண்டல மொழிப் பயிற்று மையம் என்னும் நிறுவனத்தை நான் பாராட்டுகிறேன். கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளொடு முன் தோன்றிய மூத்த மொழி; முச்சங்கம் கண்டமொழி தமிழ்மொழி. இலக்கணச் செம்மையும் இலக்கிய வளமையும் கொண்டமொழி தமிழ்மொழி. மிகச்சிறந்த பண்பாட்டுக் கூறுகளை உள்ளடக்கிய மொழி தமிழ்மொழி. பண்டைத் தமிழகத்தில் அரசியல், வணிகம் போன்றவை மிகச்சிறந்த நிலையில் நடைபெற்று வந்ததனையும், கலைகளும் மொழியும் வளர்க்கப்பட்ட தனையும் பழந்தமிழ் இலக்கியங்கள் மட்டுமன்றி வெளிநாட்டார் எழுதி வைத்துள்ள குறிப்புகளும் உணர்த்து கின்றன. இத்தகைய சிறப்பு வாய்ந்த மொழியைப் பல மாநிலங்களிலுள்ள பத்தாயிரம் மாணவர்கள் கற்றுக் கொள்வதற்குத் தென்மண்டல மொழிப்பயிற்றுமையம் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது என்பதனை அறிந்து பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இத்தகைய சிறப்பு வாய்ந்த மொழிகள் அனைத்தையும் சிறார்கள் கற்பதற்கு வழிவகை செய்வதன் மூலம் தேசிய ஒருமைப்பாடு உருவாகும் என்று நினைக்கின்ற இந்நிறுவனத்தாரின் தொண்டுள்ளத்தைப் பாராட்டுகின்றேன். தமிழ் மக்களைப் போலப் பிறமாநில மக்களையும் ஒழுக்க சீலர்களாக மாற்றுவதற்கு இந்நிறுவனம் பாடுபட வேண்டும்'' என்று பேசினார்.

அதைத் தொடர்ந்து பத்து நாட்கள் தங்கி ஓரளவு தமிழ் மொழியைக் கற்றுக்கொண்ட வெளிமாநிலத்தைச் சார்ந்த பல மாணவர்கள் உரையாற்றினர். கேரளத்தைச் சார்ந்த **விவேகானந்தன்**, **வேணுநாதன்**, ஒரிசாவிலிருந்து வந்த **குப்தேஸ்வரதாஸ்** **சாடங்கி**, ஆந்திரமாநிலத்தைச் சார்ந்த **முரளிகிருஷ்ணன்**, **துளசிராம்**, கர்நாடக மாநில மாணவன் **இராதாகிருஷ்ணன்**, மத்தியபிரதேச மாணவன் **சுக்லா**, இமாச்சலபிரதேச மாணவன் **அனிஷ்குப்தா** ஆகியோர் தங்களுடைய பத்து நாட்கள் அனுபவம் குறித்தும் தஞ்சைக்குப் பெருமை சேர்க்கும் பெருவுடையார் கோயில், சரசுவதிமஹால் நூலகம், கரந்தைத் தமிழ்ச்சங்கம், தமிழ்ப் பல்கலைக் கழகம்

ஆகியவற்றின் சிறப்புக்கள் குறித்தும் மழலைத் தமிழில் உரையாற்றினர். கருநாடக மாணவி சாந்தலா குழுவினர், பாரதியாரின் "சிந்துநதியின் மிசை நிலவினிலே" என்னும் பாடல் முழுவதையும் இசையோடு பாடி அனைவரையும் வியப்பிலாழ்த்தினர். அத்துடன் எல்லா மாநிலத்தின் சிறப்புக் களையும் விளக்கும் ஓரங்க நாடகம் ஒன்றையும் சாந்தலா குழுவினர் நடித்துக் காட்டி அவையோரை மகிழ்வித்தனர்.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் வணக்கத்திற் குரிய முதுமுனைவர் வ. அய். சுப்பிரமணியம் அவர்கள் விழா நிறைவுப் பேருரை ஆற்றினார்.

"இமாசலம், ஒரிசா, கருநாடகம், ஆந்திரம், கேரளம் போன்ற பல்வேறு மாநிலங்களிலிருந்து தஞ்சைக்கு வருகை தந்து, இங்கே தங்கி, தமிழ்மொழியை இயன்ற அளவு கற்றுக் கொண்ட ஆர்வமிக்க மாணவர்களைக் காணும்போது அளவு கடந்த மகிழ்ச்சி ஏற்படுகின்றது. இப்பாசறையின் நிறைவு விழாவில் கலந்து கொள்வதை மதிப்பாகவும், மரியாதையாக வும் யான் கருதுகிறேன்.

மைசூரிலுள்ள தென்மண்டல மொழிப் பயிற்று மையத்தைக் தோற்றுவித்தவர் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்ற உண்மை நம்மில் பலருக்குத் தெரியாது. இந் நிறுவனத்தைத் தோற்றுவித்த வி. கே. ஆர் வி. ராவ் என்பவர் தம் தந்தையாருடன் கும்பகோணத்தில் தங்கி, ஏழாம் வகுப்பு வரை குடந்தையிலேயே படித்தவர். இந்திய நடுவணரசின் கல்வியமைச்சராகப் பல்லாண்டுகள் பதவி வகித்த பெருமைக்குரியவர். அவர் இந்திய அரசின் கல்வியமைச்சராகப் பொறுப்பு வகித்த காலங்களில் ஒவ்வோர் மாநிலங்களிலும் வழங்கும் வட்டார மொழிகளின் வளர்ச்சித் திட்டங்களுக்காகப் பல கோடி ரூபாய் செலவிட அனுமதி அளித்தார். மொழி ஒற்றுமைதான் நாட்டு ஒற்றுமைக்கு வழிவகுக்க முடியும்.

இந்திய உபகண்டத்தில் நிகழ்ந்த முப்பெரும் மறுமலர்ச்சி களுக்கு மொழியே அடிப்படையாக அமைந்தது. ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர். புத்த பெருமான் மரணத்தறுவாயில் இருக்கும்போது அவருடைய சீடர்கள் அவரிடம், "பெருமானே! தங்களுடைய போதனைகளை அறநெறிகளை எந்த மொழியின் வாயிலாக நாங்கள் பரப்ப வேண்டும்?" என்று கேட்டபோது, "மக்கள் எந்த மொழியில்

பேசுகிறார்களோ அந்த மொழியின் வாயிலாக என் அறவுரைகளைப் பரப்புக'' எனப் புத்தர் கட்டளையிட்டார். இலங்கை, சப்பான், மலேசியா, சிங்கப்பூர் உள்ளிட்ட பல நாடுகளில் இன்றைக்குப் புத்தமதம் பரவியிருப்பதற்குப் புத்தருடைய பரந்துபட்ட மொழிக்கொள்கையே காரணமாகும். இந்தியாவிலிருந்து வெளிநாட்டிற்குச் சென்ற மிகப்பெரிய முதல் மறுமலர்ச்சி புத்தமதக் கோட்பாடு என்று கூறலாம்.

இந்தியாவில் நிகழ்ந்த இரண்டாவது மறுமலர்ச்சி பக்தி இயக்கமாகும். தமிழகம் இந்தியப் பண்பாட்டிற்கு அளித்த மிகப்பெரிய கொடை பக்தி இயக்கம் என்று கண்ணை மூடிக் கொண்டு கூறுவேன். தமிழகத்தில் குறிப்பாகக் காவிரிக் கரையோரம் தோன்றிய பக்தி இயக்கம் வங்காளம் வரை சென்றதற்கு அருளாளர்களின் விரிந்த மனப்பான்மையே காரணமாகும்.

ஆங்கிலேயருக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுந்ததை இந்தியாவின் மூன்றாம் மறுமலர்ச்சிக்கட்டம் எனலாம். அலகாபாத், டில்லி, கல்கத்தா போன்ற இடங்களில் கூடுகின்ற தேச ஒற்றுமை மாநாடுகளில் ஆங்கிலத்தில் உரைநிகழ்த்தப்படும் அங்கு நிகழ்த்தப்படும் ஆங்கில உரைகளின் கருத்துக்களைப் பல்வேறு மாநிலங்களிலிருந்து அம்மாநாடுகளில் கலந்து கொள்ளும் தலைவர்கள் தங்களுடைய தாய்மொழிகளில் தங்கள் மாநில மக்களுக்கு வழங்கி விழிப்புணர்வைத் தோற்றுவித்தனர். இப்படியாக, இந்தியாவில் தோன்றிய மூன்று மலர்ச்சிகளுக்கு மொழிக்கொள்கை தடையாக இருந்ததில்லை. எனவே, மொழியானது மக்களைப் பிரிக்கக் கூடியது என்று கூறுவது வரலாற்றிற்கு எவ்வளவு தூரம் பொருந்தும் என எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஐந்தாவது தேசிய ஒருமைப்பாட்டுத் தமிழ்ப் பாசறையைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் கல்வி நிறுவனங்களுள் ஒன்றான கரந்தைப் புலவர் கல்லூரியில் நடத்த வேண்டும் என முடிவு செய்த தென்மண்டல மொழிப்பயிற்று மையத்தின் இயக்குநர் பாராட்டுக்குரியவர். மிகப் பொருத்தமான — தகுதியான ஓரிடத்தை அவர் தெரிந்தெடுத்துப் பாசறையை நடத்தியுள்ளார்.

ஏகதேசம் 75 ஆண்டுக்காலம் தமிழ் வளர்த்த பெருமைக்குரியது கரந்தைத் தமிழ்ச்சங்கம். தமிழின் இலக்கண,

இலக்கியங்கள், தமிழாய்வுகள், தமிழ்க் கலைகள் ஆகியவற்றின் வேகமான வளர்ச்சிக்கு வித்திட்டமண் கரந்தைமண். ஏகதேசம் 35 ஆண்டுகளுக்கு முன் நான் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் பயின்றபோது இக்கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்கு வந்துள்ளேன். அப்போது பசுமை நிறைந்த மரங்கள் மிகுதியாகக் காணப்பட்டதோடு பைந்தமிழும் இச்சங்கத்தில் செழுமையாக வளர்க்கப்பட்டதனைக் கண்டு மகிழ்ச்சி அடைந்தவன் நான். தமிழ் வளர்க்கும் சீரிய பணியை இன்றைக்கும் தொடர்ந்து, மரியாதைக்குரிய நண்பர் இராமநாதன் தலைமையில் இயங்கும் இச்சங்கம் ஆற்றி வருவதனை நன்கறிந்து, மொழிப்பயிற்று நிறுவனத்தார் இங்கே இப்பாசறையை நடத்தியுள்ளனர். இங்கே கற்றுக் கொண்ட மொழி, பண்பாடு, கலை பற்றிய செய்திகளை மாணவர்களாகிய நீங்கள் உங்கள் மாநிலங்களில் பரப்ப வேண்டுகிறேன். மாணவச் செல்வங்களாகிய உங்களுக்கு எல்லா நலங்களும் கிடைக்க மனமார வாழ்த்துகிறேன்'' என்று துணைவேந்தர் தம் உரையில் குறிப்பிட்டார்.

இறுதியாகப் பாசறையின் மற்றொரு ஒருங்கிணைப்பாளர் டாக்டர் **சாம் மோகன் லால்** நன்றி நவில, நாட்டுப்பண்ணுடன் விழா இனிது நிறைவு பெற்றது.

மௌரியரைப்பற்றிய சங்கப்பாடல்கள் காலம் ஓர் ஒப்பாய்வு

பூரண சந்திர ஜீவா, M. A.

1. சங்க இலக்கியங்களில் மௌரிய மன்னர்களது தென்னாட்டுப் படையெடுப்பைக் குறித்துக் காணப்படும் வரலாற்றுக் குறிப்புகளைக் கல்வெட்டியல் அடிப்படையில் மறுஆய்வு செய்வதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

2. சங்க இலக்கியங்களில் நந்தர், மௌரியர் போன்ற வடநாட்டு மன்னர்களுடைய செல்வப் பெருக்கு, படைவலிமை, அறப்பணிகள் பற்றிக் குறிப்பிடும் பாடல்கள் உள்ளன. மாமூலனார், உமட்டூர் கிழார் மகனார் பரங்கொற்றனார், கள்ளில் ஆத்திரையனார் போன்ற நற்புலவர்கள் இவற்றைப் பாடியுள்ளனர். மௌரியர் மோரியர் என்று தமிழ்மொழி மரபிற்கேற்ப அழைக்கப் பெறுகிறார்கள். மௌரியரைக் குறிக்கும் செய்திகள்.

1. ‘‘கனைகுர லிசைக்கும் விரைசெலற் கடுங்கணை
முரண்மிகு வடுகர் முன்னுற மோரியர்
தென்றிசை மாதிர முன்னிய வரவிற்கு
விண்ணுற ஓங்கிய பனியிருங் குன்றத்து
ஒண்கதிர்த் திகிரி யுருளிய குறைத்த
அறையிறந், தவரோ சென்றனர்’’
(மாமூலனார் — அகநானூறு, 281)

2. ‘‘.......................... ....வெல்கொடித்
துனைகா லன்ன புனைதேர்க் கோசர்
தொன்மூ தாலத் தரும்பணைப் பொதியில்
இன்னிசை முரசங் கடிப்பிகுத் திரங்கத்
தெம்முனை சிதைத்த ஞான்றை மோகூர்
பணியா மையிற் பகைதலை வந்த
மாகெழு தானை வம்ப மோரியர்
புனைதேர் நேமி யுருளிய குறைத்த
இலங்குவெள் ளருவிய அறைவா யும்பர்’’
(மாமூலனார் — அகநானூறு, 251)

3. விண்பொரு நெடுங்குடை இயல்தேர் மோரியர்
பொன்புனை திகிரி திரிதரக் குறைத்த
அறையிறந்து அகன்றன ராயினும்"
(உ. கி ம பரங்கொற்றனார் — அகநானூறு, 69)

4. "..................................வென்வேல்
விண்பொரு நெடுங்குடைக் கொடித்தேர் மோரியர்
திண்கதிர்த் திகிரி திரிதரக் குறைத்த
உலக விடைகழி யறைவாய் நிலைஇய
மலர்வாய் மண்டிலத் தன்ன நாளும்
பலர்புர வெதிர்ந்த வறத்துறை நின்னே'
(கள்ளில் ஆத்திரையனார் புறநானூறு, 175)

மேற்கண்ட பாடல்கள் பல வரலாற்றுச் சான்றுகளைத் தந்தாலும், தம் காலத்தை வெளிப்படையாக உணர்த்த இயலாத நிலையில் உள்ளன.

3. இப்பாடல்களால் அறியப்பெறும் கருத்துக்கள் வருமாறு: (1) மௌரிய மன்னர் 'வம்ப மோரியர்' என்றும், (2) அவர்தம் படையெடுப்புக்கள் 'தென்திசை மாதிரம் முன்னிய வரவு' என்றும், (3) துளுநாட்டுக் கோசர்களுக்கு எதிராக மௌரியர் படையெடுத்ததும், (4) தங்கள் படை வருகைக்கு மலைகளை வெட்டி வழியமைத்தும், (5) அவ்வழிகளை மக்கள் போக்கு வரவிற்குப் பயன்படுத்தினர் என்பதும். (6) தென்திசைப்படையெடுப்பின்போது வடுகர் அவர்களது முன்னணிப்படையினராக வந்தனர் என்றும், (7) தாங்கள் அமைந்திருந்த சாலைகளில் (மலைநெறி—அறைவாய்) அறப்பணிகள் செய்ய அறத்துறைகள் நிறுவி இருந்தனர் என்பன போன்ற செய்திகள் காணப்படுகின்றன. மேற்காணும் குறிப்புகளுடன் மௌரிய மன்னர்கள் பற்றியும் அறிவது நலம். முதல் மன்னன் சந்திர குப்த மௌரியன் (கி. மு. 325 –301) சாணக்கியர் துணையுடன் நந்தர்களை வென்று அரசமைத்தான். அவன் மகன் பிந்துசாரன் கி. மு. 301—273 அளவில் ஆண்டான். அதன் பின் பேரரசரான அசோகர் பட்டமேற்று (கி. மு. 269—232) ஏறக்குறைய 37 ஆண்டுகள் ஆண்டார். அவருக்குப்பின் அவரது மௌரியப் பேரரசு சிதறுண்டு, வலிமை இழந்து, கடைசி மன்னன் பிரகத்ரதன் தன் படைத்தலைவன் புஷ்யமித்திரன் என்பவனால் கி.மு. 1886இல் கொல்லப்படும்வரை ஏறக்குறைய அரைநூற்றாண்டுக் காலம் மௌரியர் ஆட்சியில் இருந்தனர்.

3.1. மௌரிய மன்னர்கள் அரசமைத்த ஆரம்ப நிலையிலேயே படையெடுப்புகள் நிகழ்ந்தன என்பதை வம்ப மோரியர் என்ற மாமூலனார் சொல்லாட்சி உணர்த்துகிறது. வம்ப மோரியர் என்பதற்குப் புதிதாக ஆட்சிக்குவந்த மௌரியர் என்பது பொருள். மௌரியரது ஆட்சிக் காலத்தையும், அவர்கள் ஆட்சியைக் கைப்பற்றி ஆளத்தொடங்கிய நிலையினையும் குறிப்பாக உணர்த்துகிறார் மாமூலனார். இப்பாடல் பல நூற்றாண்டுகள் சென்று எழுதப்பெற்றிருக்குமேயானால்[1] ஒரு குலத்தினரை இவ்வாறு புதியவர் - பிற்காலத்தினர் என்று பிரித்துக் காட்ட வேண்டிய தேவை இல்லாது போயிருக்கும். அழிந்துபோன ஒரு குலத்தினரை இவ்வாறு பிரிப்பது அறிவுடைமையாகாது. எனவே இப்பாடல் இந்நிகழ்ச்சி நடைபெற்றவுடன், அல்லது இந்நிகழ்ச்சியின் நினைவு மங்குவதற்குள் எழுதப்பெற்றிருக்கவேண்டும்.

3. 2. மௌரியர் படையெடுப்பு இங்கே 'தென்திசை மாதிரம் முன்னிய வரவு' என்று குறிப்பிடப்பெறுகிறது, தென்திசை நிலப்பகுதிகளை (வெற்றி கொள்ளக்) கருதிய படைவருகை என்பது இதன் பொருள். வடநாடுகளை வென்றபின் மௌரியர் நோக்கம் தென்திசைக்குத் திரும்பியது எனலாம். பாடலில் 'முரண்மிகு வடுகர் முன்னுற' என்று குறிக்கப்பெற்றதால், இப்படையெடுப்பின் காலத்து மௌரியப் பேரரசு வடுகர்தேசம் வரையில் பரந்திருந்தமையை உணரலாம். 'வலிமையும் பகைமையும் கொண்ட வடதிசை மக்கள் முன்னணிப்படையாக வர' என்பது மேற்காணும் தொடரின் பொருளாகும். ஆந்திர நாடு, எருமை நாடு (மைசூர்) ஆகியவை வடுகர் நாடு எனப்படும்.

"புடையலங் கழற்கால் புல்லி குன்றத்து
நடையருங் கானம் விலங்கி நோன்சிலைத்
தொடையமை பகழித் துவன்றுநிலை வடுகர்
பிழியார் மகிழர் கலிசிறந் தார்க்கும்
மொழிபெயர் தேஎம் இறந்தன ராயினும்"

(அகநானூறு, 295) என்னும் பாடலடியில் வேங்கடமலைக்கு வடக்கே உள்ள நாட்டை வடுகர் தேயம் என்று குறிக்கிறார் மாமூலனார். இன்னொரு பாடலில் (அகநானூறு, 253) நக்கீரர்,

"நேரா வன்தோள் வடுகர் பெருமகன்
பேரிசை யெருமை நன்னாட் டுள்ளதை
அயிரியா றிறந்தன ராயினும்"

என்கிறார். எருமை நாடு (மைசூர்ப் பகுதிகள்) வடுகர் நாடாகவும், அரசன் எருமை, வடுகர் பெருமகன் என்றும் குறிக்கிறார். ஆனால் மாமூலனார் எருமை நாட்டை 'நுண்பூண் எருமை குடநாட் டன்ன' என்று (அகம், 115) வேறுபாடலில், மேற்குத் திசையில் உள்ள நாடாகக் குறிக்கிறார். எனவே இவரது பாடலில் கண்ட வடுகர் வேங்கடமலைக்கு வடக்கே வாழ்ந்த ஆந்திர தேசத்தினரே என்பது உறுதி. தொண்டை நாட்டினரான மாமூலனாருக்கு மைசூர் மேற்கு நாடாகவும், தெற்கில் உள்ள பாண்டிய நாட்டினரான நக்கீரருக்கு அந்நாடு வடுகர் நாடு என்றும் தோன்றுவது புவியியல் அமைப்பினாலேயே யாகும். இதனால் மாமூலனார் கூறும் வடுகர் முன்னணிப் படையினர் ஆந்திர தேசத்தினர் என்பது உறுதி.

3. 3. ஆந்திர நாட்டின் வடபகுதி மௌரியர் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது என்பதை அசோகரது கல்வெட்டுகளால் அறிகிறோம். அசோகரது முதலாவது சிறிய கற்பாறை ஆணை (Minor Rock Edicts) கூறுவதாவது: "சுவர்ணகிரியில் இருந்து அரசகுமாரனும் மகாமாத்திரர்களும் இசிலாவில் உள்ள அதிகாரிகளுக்குத்; தங்கள் வாழ்த்துடன் பின்வரும் செய்தியை அனுப்ப வேண்டியது." பேரரசின் தெற்கு மாநிலத்தின் தலைநகராக விளங்கியது கனககிரி எனப்படும் சுவர்ணகிரி. பேரரசு நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு அரசரது பிரதிநிதிகளாக இருந்து அரசகுமாரர்கள் ஆண்டு வந்தனர். மேற்கண்ட சுவர்ணகிரியில் இருந்து தென்னிந்திய (தக்காணம்) நிலப்பகுதிகள் ஆளப்பட்டன. சுவர்ணகிரி ஆந்திரத்தில் மாஸ்கிக்கும் ஹம்பிக்கும்இடையில்இருந்ததாக கே.ஏ.நீலகண்ட சாத்திரி கூறுகிறார்.[2] அசோகர் தம் காலத்தில் முதலில் வெளியிட்ட மேற்கண்ட ஆணையினால் தென்னிந்தியப் பகுதிகள் அவரால் வெல்லப்படவில்லை என்பதை உணர்கிறோம். ஏனெனில் அசோகர் வென்ற ஒரே நாடு கலிங்க நாடே என்பது அனைவருக்கும் தெரிந்த செய்தியே. அசோகரது கல்வெட்டுகள் ஆந்திரதேசம் கர்நூல் மாவட்டம் வரையில் காணப்படுவதால் அப்பகுதி மௌரியப்பேரரசுக்கு அடங்கி இருந்தது என்று அறியலாம். எனவே, ஆந்திரமக்கள் பேரரசின் முன்னணிப் படையாக இருந்து மௌரியருக்குத் தென்திசைப் படையெடுப்புகளில் உதவி இருக்கலாம். இதனை மாமூலனார்

தரும் செய்தி உறுதி செய்கிறது. ‘முரண்மிகு வடுகர் முன்னுற மோரியர் தென்திசை மாதிர முன்னிய வரவு’ என்று அவர் குறிப்பது அசோகரது 13 ஆவது கற்பாறை ஆணை ஆந்திரநாடு தன் ஆட்சியில் இருப்பதாகக் குறிப்பதை உறுதி செய்யும் சான்றாகும்.

3. 4. மேற்காணும் செய்தியை மாமூலனாரது வேறொரு பாடற் கருத்தும் உறுதி செய்கிறது. தன் விருப்பத்திற்கு இணங்காத மோகூருக்கு எதிராக மௌரியப் படைகள் வந்ததாக அவர் குறிக்கிறார். முன்பு கூறப்பட்ட (அகநானூறு 251)பாடற்கருத்து வருமாறு ‘‘தொன்மைவாய்ந்தஆலமரத்தின் அரிய கிளைகளையுடையஊரின் பொதுவிடத்தேமுரசம்ஒலிக்க, கோசர் தம் பகைவரது போர்முனையைச் சிதைத்த காலத்தில், தங்கள் ஆணையை ஏற்று (அக்கோசரது) மோகூர்பணியாமையால் அவர் பகைவருக்குச் சார்பாக வந்த குதிரைப்படை நிறைந்த புதியவர்களான மௌரியர்.’’ மோகூர் கோசருக்குத் தொடர்புடையதோர் ஊராகும். மாமூலனார் கோசருக்கு உரியது துளுநாடு என்கிறார் (அகம், 15). மதுரைக்காஞ்சியில் மோகூரின் பெருமையைக் கூறும் மாங்குடி மருதனார் அவ்வூர்க் கோசர்களால் பழையன் அரசவை பொலிவுற்று விளங்குவதையும், அப்பழையனுடைய மகன் பழையன் மாறனது தலைமையில் கோசர் படைப்பிரிவு ஒன்று பாண்டிய நாட்டில் இருந்ததையும் குறிப்பிடுகிறார்.[3] பரணர் என்னும் புலவர் மோகூர் காவல் மரம் பாண்டியருடையது போல வேம்பு என்றும், அவ்வூர் சேரநாட்டிற்கு அண்மையில் உள்ளதோர் இடமென்றும் பதிற்றுப்பத்தில் கூறுகிறார்.[4] இதனால் பாண்டியர்— கோசர் — மோகூர் தொடர்பினை அறிகிறோம். மேலும் மோகூர் துளுநாட்டில் உள்ளதோர் ஊராதலே வேண்டும். ஆனால், பல ஆசிரியர்கள் மௌரியர் கோசருக்குச் சார்பாக மோகூர் மீது படையெடுத்து வந்தாகக் கூறுகின்றனர். இதற்குச் சான்றேதும் இல்லை. அகநானூற்றுப் பாடலை ஆழ்ந்து கற்காத ஆசிரியர்கள் சிலர் பாடலில் வரும் ‘பொதியில்’ என்ற சொல்லைப் ‘பொதிகை’ என்று தவறாகப் பொருள்கொண்டு (பொதியில் - ஊர்ப்பொதுவிடம்) மௌரியர் பொதிகைமலை வரை (திருநெல்வேலி) வந்ததாகக் கூறுகின்றனர். மோகூர் பணியாததால் சுவர்ணகிரியில் இருந்த அரசப்பிரதிநிதியின் ஏவலால் மோகூர்க் கோசரது பகைவருக்குச் சார்பாக மௌரியப் படைகள் வந்தன. அசோகர் கல்வெட்டால் பேரரசு எல்லை தெற்கில் கருநாடக சித்திரதுர்க்கம் மாவட்டம்

வரையில் பரவியிருந்ததாக அறியமுடிகிறது. கோசர் மௌரியருக்கு எதிராக இருந்ததால் தம் எல்லைப்புறம் இருந்த துளுநாட்டின் மீது அவர்கள் படையெடுத்துத் தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்த முயன்றனர். பாண்டியருக்கு நெருங்கியவர்களான கோசருக்குச் சார்பாகத் தமிழக மன்னர்கள் இருந்திருப்பர். வடுகர் (ஆந்திரர்) துணையுடன் தமிழகத்திலிருந்த நாடுகளுடன் மௌரியர் தொடர்ந்து போராடி வந்தனர் எனலாம். மேற்பாடலால் அறியப்பெறும் வரலாற்று நிலை: மௌரியப் பேரரசின் தெற்கு எல்லைக்கு இப்பால் இருந்த தமிழகத்துக்கு வடக்கேயுள்ள-நிலப்பகுதிகள் மௌரியர் தமிழரின் போட்டிக்களமாக இருந்தன; தமிழகத்துக்கு வடக்கே மௌரியரால் வெல்லப்படாத நாடுகளும் இருந்தன என்பனவாம்.

3. 5. மேற்கண்ட படையெடுப்பை நடத்திய மௌரிய மன்னன் யார் என்ற கேள்வி எழுகிறது. கலிங்க மன்னன் காரவேலனது ஹதிகும்பா கல்வெட்டின் அடிப்படையில் இங்கே ஒரு மறு ஆய்வு மேற்கொள்ளலாம். கல்வெட்டின் வரி 11 வருமாறு.

L 11. (Mamdam) Cha Ava raja - nivesidam Pidudam gadhabhanaglena Kasayathi (,) janapada bavanam Cha terasa vasa Sata Katam bhimdati Tamira daha Samghatam (.)

E. Tr. [And in the 11th year (of his reign] (carring) with (him) gems and jewels (he) moves [in the Southern direction] in a slow procession and causes Pidunda the abode of Ava Kings, to be ploughed by ploughs drawn by asses and, for the well being of (his) realm, breaks the confederacy of Tamila Countries (which had been) formed in the year 113.

தமிழாக்கம் (சுருக்கமாக): அவனது 11 ஆம் ஆட்சி யாண்டில் மணிகள் அணிகளுடன் தெற்குத் திசை நோக்கி அணிவகுத்துச் சென்று, அவ அரசர்களின் பிதுண்தா என்னும் அரணை வென்று, கழுதை ஏர்பூட்டி உழுது, தன் ஆட்சியின் நன்மை கருதி 113 ஆண்டில் உருவாக்கப் பெற்றிருந்த தமிழக நாடுகளின் கூட்டிணைவை உடைத்தான்.[5]

கல்வெட்டின் வரி 13 பாண்டிய நாட்டில் காரவேலன் பெற்ற வெற்றிகளையும் கொள்ளைப் பொருள்களையும் பற்றிக் கூறுகிறது. பிராகிருத மொழியிலான இக்கல்வெட்டின்

தமிழகம் தொடர்பான செய்திகளை நோக்கினால் காரவேலன் இருமுறை தமிழகத்தின் மீது படையெடுத்ததுபோல் தோன்றுகிறது. (கட்டுரையின் சுருக்கம் கருதி இக்கல்வெட்டினைப் பற்றிய பிற செய்திகள் கூறப்படவில்லை.)

3.6 இக்கல்வெட்டினை ஆய்வு செய்த பண். சசிகாந்த் அவர்களது முடிவின்படி இக்கல்வெட்டின் காலம் கி. மு. 172 ஆகும். ஆனால் கல்வெட்டில் குறிக்கப்பெறும் கால அளவுகள் மகாவீரர் யுகம் அடிப்படையில் அமைந்தவை (கி. மு. 527, அக்டோ 15) என்பது அவரது கருத்து. வேறு சிலர் நந்தர் ஆண்டின் அடிப்படையிலானது என்று கருதுவர். கல்வெட்டின் படி, தமிழக நாடுகளின் கூட்டிணைவு 113 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டிருந்தது என்று தெரிகிறது. அவர் கருத்துப் படி இக்கூட்டிணைவு 527 – 113 = கி.மு.414 -ல் நந்த அரசர்களின் அச்சுறுத்தலால் தோன்றியது என்றாகும். ஆராய்ந்து பார்த்தால் கி.மு. 414இல் நந்தர்குல ஆட்சி தொடங்கி விட்டதா என்பதைப்பற்றி வரலாற்று ஆய்வாளரிடையே தீர்க்கப்படாத ஐயம் நிலவுவதாலும், 414இல் தோன்றி 172இல் காரவேலனால் உடைக்கப்படும்வரை ஏறக்குறைய 242 ஆண்டுகள் ஓர் அரசியல் ஒப்பந்தம் நீடித்தது என்பது ஏற்கவியலாத காலவரையறை என்பதாலும், மௌரியர் காலம் முதல், பின் சாதவாகனர் ஆட்சியில் முதலாம் சதகர்ணியின் காலம்வரை ஏறக்குறைய 125 ஆண்டுகள் தக்காணத்தில் அம்மன்னர்களின் படையெடுப்பு அச்சுறுத்தல் நீடித்தது என்னும் வரலாற்றுண்மை மேற்கண்ட காரவேலன் கல்வெட்டில் காணும் கால அளவை உறுதி செய்வதாலும், கி. மு. 414இல் தமிழக நாடுகளின் கூட்டிணைவு தோன்றியது என்னும் அவர் கருத்தை ஏற்க இயலவில்லை. காரவேலன் தன் பதினோராம் ஆட்சியாண்டில் கூட்டிணைவை உடைத்ததாகக் கூறுகிறான். உருவாகி 113 ஆண்டுகள் கடந்து அதனை உடைத்ததாகக் கூறாமல், அது 113 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டிருந்தது என்று கூறுகிறான் (Tamil Confederacy is stated to have been formed in terasa-vasa-Sata, or the year 113 - Ibid. P. 33). எனவே மேற்கண்ட காலம் ஒரு பொதுவான ஆண்டின் அடிப்படையில் அமைந்தது என்று அறிகிறோம். தங்கள் வெற்றிகளையும், வீரச்செயல்களையும் அரசர்கள் தங்கள் பட்டமெய்திய ஆண்டினை அடிப்படையாகக் கொண்டு கல்வெட்டில் அமைப்பது வழக்கம். இம்முறை மேற்கண்ட காரவேலன் கல்வெட்டிலும் நன்கு பொருந்தியுள்ளது. காரவேலன் கி. மு. 185ல் பட்டம் எய்தினான். எனவே தமிழக

நாடுகளின் கூட்டிணைவு 185 + 113 = கி. மு. 298 அளவில் உருவாயிற்று என்று கொள்ளலாம். இக்காலத்தில் ஆண்ட மன்னன் பிந்துசரன். சந்திரகுப்தன் மாளவத்தை (அவந்தி-உச்சயினி) வென்றான். இவனது ஆட்சி சௌராட்டிரம் வரையில் காணப்படுகின்றது. அசோகர் கலிங்கத்தை மட்டும் வென்றார். ஆந்திரம் தனது ஆட்சிக்கு உட்பட்டிருந்தது என்று அவரது கல்வெட்டில் கூறியுள்ளார். எனவே மௌரியப் பேரரசைத் தெற்கே கருநாடகம் சித்திரதுர்க்கம் மாவட்டம், ஆந்திரம் கர்நூல் மாவட்டம் வரையில் விரிவுபடுத்தியவன் பிந்துசாரனே என்பது உறுதி.

4. மேற்கண்ட செய்தியின் அடிப்படையில் கருநாடக மாநிலம் சித்திரதுர்க்கம் வரையில் காணப்படும் தெற்கு எல்லையைப் பொது எல்லையாகக் கொண்டால் மேற்கே சித்திரதுர்க்கம் கிழக்கே நெல்லூர் வரை ஒரு நேர்க்கோடாக அமைக்கலாம். அதாவது தெற்கு எல்லை ஏறக்குறைய 14° வடஅட்சரேகையை ஒட்டி அமைந்திருந்ததாகக் கொள்ளலாம். பேரா. சத்தியநாதையர் போன்றோர் கூறுவதுபோல் 12° வடஅட்சரேகையை ஒட்டி அமைந்திருந்தமைக்குப் போதிய சான்றில்லை.[6]

4. 1. கூட்டிணைவு ஒன்று இருந்தமைக்கு மாமூலனார் சிறந்த சான்று ஒன்றினைத் தருகிறார். தமிழகத்துக்கு வடக்கே மொழி மாறுபட்ட நாடுகளை மூவேந்தரும் கூடி வென்றிருந்தனர் என்கிறார். பாடலின் பகுதி (அகநானூறு, 31) வருமாறு:

"கண்ணுமிழ் கழுகின் கானம் நீந்திச்
சென்றோ ரென்பிலர் தோழி வென்றியொடு
வில்லலைத் துண்ணும் வல்லாண் வாழ்க்கைத்
தமிழ்கெழு மூவர் காக்கும்
மொழிபெயர் தேஎத்த பன்மலை யிறந்தே"

இதன் பொருள்: உயிரிழந்தோரின் கண்ணை எடுத்துத் தனது குஞ்சுகளுக்கு ஊட்டும் கழுகுகள் நிறைந்த காட்டினைத் தாண்டி விற்போரில் பகைவர்களை அழித்து அவ்வெற்றியா லெய்தும் திரைப்பொருளைத் துய்க்கும் வலிய ஆண்மை பொருந்திய வாழ்க்கையினை உடைய தமிழ்நாட்டினை ஆளும் மூவேந்தராலும் காக்கப் பெறும் வேற்று மொழியினையுடைய தேசங்களிலுள்ள பல மலைகளையும் கடந்து தலைவர்

சென்றார் என்று கூறுதல் இலர் (பிரிவாற்றாமையால் வருந்துகிறாளென்று என்னையே குறை கூறுகின்றனர்). தமிழக மூவேந்தராலும் ஆளப்படும் மொழி மாறுபட்ட தேசம் என்று குறிப்பிடுவதை நோக்க, அவர்களால் தமிழகத்திற்கு வடக்கே வேற்றுத் தேசங்கள் வெல்லப்பட்டமையும், அதனை மூவரும் இணைந்த ஒரு முயற்சியாகவும் அறிய முடிகிறது. எனவே இப்பாடலை மற்ற மௌரியர்பற்றிக் குறிப்பிடுகின்ற பாடலோடும், வரலாற்று உண்மைகளோடும் பொருத்திப் பார்ப்பது இன்றியமையாததாகும். இப்பாடலைத் தவிர வேறு எங்கும் மூவேந்தரும் சேர்ந்து (கூட்டிணைவு) வேற்றுமொழி நாடுகளை வென்றதாகக் கூறப்படவில்லை என்பதையும் சங்க இலக்கியம் கற்றோர் அறிவர். மேற்செய்தி காரவேலன் கல் வெட்டினால் அறியும் செய்தியை உறுதி செய்கிறது. பிற்காலத்தில் இந்தக் கூட்டிணைவு தன்னாட்டிற்கே அச்சுறுத்த லாக மாறிற்று எனக் காரவேலன் கூறுகிறான்.

4.2. இங்கே அர்த்த சாத்திரத்தில் சாணக்கியர் தென்னிந்தியாவின் வளச்சிறப்பைக் குறித்துக் கூறுவதை ஒப்பு நோக்குக. நூலில் தென்னிந்தியாவில் வைரம் போன்ற மணிக் கற்களும், பொன்னும், முத்தும், சங்கும் அளவற்றுக் கிடைப் பதும், தெற்கே செல்லும் வணிக வழியில் கனிச்சுரங்கங்களில் கனிப்பொருள்கள் மிகுதியாகக் கிடைப்பதாகவும், அவ்வழிகள் போக்குவரவிற்கு எளிமையானவை என்றும் கூறப்பட்டுள்ளது. மேலும், சுள்ளியாற்று முத்துக்கள், மதுரையில் இருந்துவந்த மெல்லிய ஆடைகள், மற்றும் தென்னகத்தில் இருந்துவந்த பலவண்ண வைடூரியக் கற்கள், சந்தன மரங்கள் போன்றவை அரசனுடைய கருவூலத்திற்குச் சென்ற பொருட்களாகக் குறிப்பிடுகிறார். இத்தகைய வளம்மிக்க நாடுகளை வெல்ல, சந்திரகுப்தனையும், பின் பிந்துசாரனையும் சாணக்கியரே தூண்டி இருக்க வேண்டும். அவருடைய துணையுடன் பிந்துசாரன் பதினாறு மன்னர்களைப்போரில் வென்று கிழக்குக் கடலுக்கும் மேற்குக் கடலுக்கும் இடைப்பட்ட நாடுகளை யெல்லாம் தன்னாட்டுடன் இணைத்துக் கொண்டான் என்று திபேத்திய வரலாற்றாசிரியர் லாமா தாரநாதர் கூறுவது இங்கே கருதத்தக்கதாம். பிந்துசாரனின் போர்முயற்சி சாணக்கியரின் மரணத்தாலோ, தமிழக மன்னர்களின் ஒருங் கிணைந்த எதிர்ப்பினாலோ தடைபட்டது எனலாம். சந்திரகுப்தரின் அவையில் இருந்த யவன தூதனான மெகசுதெனிஸ் பாண்டிய நாட்டில் 500 யானைகளும், 4000

குதிரைகளும், 1,30,000 வீரர்களும் கொண்ட வலிமையான படையிருந்ததாகக் கூறுவதும் இங்கே ஒப்பிடத்தகும் செய்தியாகும்.

4.3. இக்குறிப்புகளைக் கொண்டு மாமூலனார் பாடல்களையும் (அகநானூறு, 281, 251), பரங்கொற்றனாரின் பாடலையும் (அகநானூறு, 69) எக்காலத்துக்கு உரியவை என எளிதாக அமைக்கலாம். கி. மு. 298 ல் கூட்டிணைவு தோன்றியதால் அக்காலத்தைத் தொடர்ந்த படையெடுப்புகளுடன் நோக்கி பிந்துசாரன் காலமான கி. மு 301 - 273க்கு இடைப்பட்ட, ஏறத்தாழ 30 ஆண்டுகளில் பாடல்கள் தோன்றின எனலாம். அதனை வம்ப மோரியர் என்ற தொடரும் உறுதி செய்கிறது. மௌரியர் புதிய ஆட்சியாளர் என்ற நினைவு மங்கும் முன்பே இப்பாடல்கள் எழுந்தன எனலாம்.

5. கள்ளில் ஆத்திரையனாரின் புறநானூற்றுப்பாடலை (75) மேற்காணும் வரலாற்று அடிப்படையில் காண வேண்டும் இப்பாடல் அசோகர் காலத்திற்குரியது என்று நிறுவலாம். அவர் கல்வெட்டுகள் கூறும் செய்திகளை இப்பாடல் உறுதி செய்கிறது அப்பாடலின் பொருள்: ‘வெற்றி பொருந்திய வேற்படையினையும் வானளாவிய நெடுங்குடையினையும் கொடிகளையும் உடைய தேர்ப்படை நிறைந்த மௌரியரது வலிய ஒளிவீசும் ஆணைச்சக்கரம் வலம் வருவதற்காக வெட்டிக் குறைத்த உலகின் இடைகழியான மலைநெறிக்கண் (மலைச் சாலை) நிலைபெற்று விளங்கும் - காலம் தவிராது இயங்கும் சூரிய மண்டிலத்தினை ஒத்த-நாளெல்லாம் வருவோரைக் காத்தலை எதிர்நோக்கி இருக்கும் மௌரியரது அறத்துறையை ஒத்த அறத்துறை உனதாகும்’ என்பது. தம்கால நிகழ்ச்சிகளை நேரிருந்து கண்டவர்கள் புறநானூற்றுப் புலவர்கள். இந்தப் பாடலில் (1) மௌரியர் மலைச்சாலைகள் அமைத்தமையும், (2) அவ்வழியினை மக்கள் போக்குவரவுக்குப் பயன்படுத்தினர் என்பதையும் (3) அச்சாலைகளில் மௌரியர் மக்கள் நலனுக்கு அறத்துறைகள் நிறுவியமையும், (4) அவர்கள் செய்தது போன்ற அறத்துறைகளைப் பேரரசு எல்லைக்கு அப்பால் இருந்தவர்களும் நிறுவியிருந்தனர் என்பனவும் போன்ற செய்திகள் காணப்படுகின்றன.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்-613 001.

தமிழ்நாடு, இந்தியா

தமிழ்ப் பல்கலைக் கழகப் புதிய வெளியீடுகள்

1. Tamil Literature — உரு. 85/—
   — Prof. M. S. Purnalingam Pillai — U S $ 17

2. மொழி நூல்
   —மாகறல் கார்த்திகேய முதலியார் — உரு. 75—

3. Tamil University Machine Translation System (TUMTS) — Rs. 75/— U.S.$ 15
   Co-authors : K. C. Chellamuthu K. Rangan
   K. Murugesan

4. A Study on the Thanjavur Art Plate — Rs. 60/—
   —Prof. P. Saravanavel — U,S.$ 12

5. நாமதீப நிகண்டு — உரு 68 -
   —கல்லிடைநகர் சிவசுப்பிரமணியக் கவிராயர்

6. மொழி நூற் கொள்கையும் தமிழ்மொழி அமைப்பும் — உரு. 45/—
   —பேரா கா. சுப்ரமணியப் பிள்ளை

7. Indians in South Africa — Rs. 60/—
   — Prof. K. Nambi Arooran — U.S.$ 12

விற்பனைக் கழிவு: அஞ்சல் வழி 25%
நேரில் 30%
அஞ்சல் செலவு தனி
பேராசிரியர் ஆய்வாளர்களுக்கு 40%
விற்பனையாளர்களுக்குப் பெறும்படிகளுக்கு ஏற்ப கழிவு உண்டு.

தொடர்பு கொள்க:- பதிப்புத்துறை இயக்குநர்,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர் - 613 001.

கரந்தைத் தமிழ்ச் சங்கவெளியீடுகள்

யாழ் நூல் — விபுலானந்த அடிகள்	ரூ	50	00
கட்டுரைப் பொழில் (சங்க மணிவிழா மலர்)	ரூ.	30	00
கட்டுரைப் பூங்கா (தமிழவேள் த. வே. உமாமகேசுவரனார் நூற்றாண்டு நினைவு வெளியீடு)	ரூ.	60	00
இராசராச சோழன் முடிசூடிய 1000 ஆவது ஆண்டு விழா நினைவுச் சிறப்பிதழ்	ரூ.	6	00
கபிலர் – நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்	ரூ	4	00
நக்கீரர் - நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்	ரூ.	3	00
மெய்ஞ்ஞானத்தின் கொலுவிருக்கையில் அஞ்ஞானத்தின் வழக்கீடு – பா. வே. மாணிக்க நாயக்கர்	ரூ.	2	00
கவியரசு நினைவு மலர்	ரூ.	1	00
தமிழரசி குறவஞ்சி	ரூ.	0	62
சிவமும் செந்தமிழும்–பாவலர் ச. பாலசுந்தரம்	ரூ	0	25

பிற வெளியீடுகள் :

கரந்தைக் கோவை (அகப்பொருட் கோவை நூல்) பேராசிரியர் ச. பாலசுந்தரம்		7	50
கலைக்கூத்தன் கவிதைகள்	ரூ	6	00

நூல்கட்குக் கழிவு 20% தரப்பெறும். அஞ்சற் செலவு தனி.
நூல்கள் வேண்டுவோர் கீழ்வரும் முகவரிக்கு எழுதுக.

தலைவர்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர்-613002.

பதிப்பாசிரியர் குழு

திரு. ச. இராமநாதன்,
தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சாவூர்-2.

பேராசிரியர். க. வெள்ளைவாரணன்,
142, கனகசபை நகர், சிதம்பரம்.

சிலம்பொலி சு. செல்லப்பன், எம். ஏ., பி. டி., பி. எல்.,
இயக்குநர், தமிழ் வளர்ச்சித்துறை, சென்னை.

டாக்டர் தமிழண்ணல், எம். ஏ., பிஎச். டி.,
தலைவர், தமிழ்த்துறை, மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம்.

டாக்டர். சி. பாலசுப்பிரமணியன்,
எம். ஏ., எம்.லிட், பிஎச். டி.,
தலைவர், தமிழ் மொழித்துறை, சென்னைப் பல்கலைக் கழகம்.

பேராசிரியர். பி. விருத்தாசலம், எம். ஏ.,
முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2

பேராசிரியர் சி. கோவிந்தராசன்,
மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம்.

புலவர் ஆ. பாலன், எம். ஏ., எம். ஃபில்.,
துணை முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2

புலவர். மீனா. இராமதாசு, எம். ஏ.,
தலைமைத் தமிழாசிரியர்,
உமாமகேசுவரா மேனிலைப் பள்ளி, தஞ்சாவூர்-2.

திரு. பா. மதிவாணன், எம். ஏ., எம்.ஃபில்.,
துணைப்பேராசிரியர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2

பதிப்பாசிரியர்
பேராசிரியர் ச. பாலசுந்தரம்

Regd. No. TN/TJ/17.

நூல்-அஞ்சல்

பெறுநர்

திருமிகு ....

11. The Curator,
Govt. Oriental Manuscripts Library,
Madras. 600 005.

ஆசிரியர்,
தமிழ்ப்பொழில்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர் - 613 002.

தமிழ்ப் பொழில் கட்டணம்

		உள்நாடு		வெளிநாடு	
தனியிதழ்	ரூ.	2	50	3	00
ஆண்டுக் கட்டணம்	ரூ.	25	00	60	00
வாழ் நாள் கட்டணம்	ரூ.	250	00	600	00

வெளியிடுபவர் : திரு. ச. இராமநாதன், தலைவர் கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர்-613 002.
அச்சிடுபவர் திரு. M. சந்திரமௌலி,
ஜெமினி அச்சகம், 1837/1, மேலராசவீதி,
தஞ்சாவூர் - 613 009.